
பொதுசன நூலகம்
நாவாந்துறை

Saturday மெயில்
සැටඩේ මේල්
A Fascinating We... tin
01 - 08
21-11-2009
பக்கங்கள்: 24
விலை: 15/=

# சச்சின் VS தக்கரே





அண்மையில் நடைபெற்ற தேர்தலில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தின் புதிய சட்டசபையின் முதலாவது அமர்வு கடந்த வாரம் இடம்பெற்ற போது இந்திமொழியில் பதவிப் பிரமாணம் செய்த சமாஜ்வாதி கட்சியின் அபூஅஷ்மி என்ற உறுப்பினரை மராத்தி வெறியர்களான மகாராஷ்டிரா நவநிர்மாண்சேனை கட்சியின் உறுப்பினர்கள் பாய்ந்து தாக்கி காயம் விளைவித்து பெரும் அட்டகாசம் செய்த சம்பவம் குறித்து நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனையின் தலைவர் ராஜ் தக்கரே தனது கட்சி உறுப்பினர்கள் மராத்தி மொழியிலேயே பதவிப் பிரமாணம் செய்ய வேண்டுமென்று பகிரங்க கடிதம் ஒன்றை எழுதியதையடுத்தே இச்சம்பவம் இடம்பெற்றது. அந்தக் கட்சியின் 13 சட்டசபை உறுப்பினர்கள் சபைக்குள் செய்த அடாவடித்தனங்களில் பெண் உறுப்பினர் ஒருவரும் படுகாயமடைந்தார். மராத்தி மொழியைத் தவிர வேறு எந்த மொழியிலும் மகாராஷ்டிரா சட்டசபையில் உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்யக்கூடாது என்பதே இந்த இனவெறியர்களின் நிலைப்பாடாகும்.

அடாவடித்தனம் செய்தமைக்காக மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனையின் 4 உறுப்பினர்கள் 4 வருடங்களுக்குச் சட்டசபையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மராத்திவெறியர்களின் இனவாத அரசியல் போக்கு குறித்து நையாண்டி செய்து ரைம்ஸ் ஓஃப் இந்தியா பத்திரிகை அண்மையில் வெளியிட்ட கேலிச் சித்திரமொன்றில் 'பவ்வவ்' (Bow-Wow) என்பது ஆங்கில மொழியாக இருப்பதால் இனிமேல் உள்ளூர் மொழியில்தான் நாய்கள் குரைக்க வேண்டுமென்று ராஜ்தக்கரேயின் கட்சி விரும்புகிறது' என்று ஒரு தம்பதியர்,பயந்தடித்து ஓடும் இரு நாய்களைப் பார்த்துக் கூறுவதாக சித்திரிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கேலிச் சித்திரத்தையும் இங்கு நாம் மறுபிரசுரம் செய்திருக்கிறோம்.

மும்பை மராத்தியர்களுக்கே என்ற கோஷமும் மராத்திவெறி அரசியல்வாதிகளினால் அண்மைக் காலமாக தீவிரமாக கிளப்பப்படுவதை காணக்கூடியதாகவும் இருக்கிறது. மராத்தி வெறி அரசியல் மகாராஷ்டிராவில் அதுவும் குறிப்பாக இந்தியாவின் வர்த்தகத் தலைநகரம் என்று வர்ணிக்கப்படும் மும்பையில் வாழும் அல்லது தொழில்பார்க்கும் ஏனைய மாநிலத்தவர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகிறது.

(2ஆம் பக்கம் பார்க்க)




**MNS wants them to bark in the local language since *bow-wow* is English**

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் மிகப்பெரிய கோடீஸ்வரர்களில் தொடர்ந்தும் முக்கேஷ் அம்பானி முதலிடம்





**கலாநிதி மாறனுக்கு 20வது இடம்**

**சொத்துகளின் நிகரப் பெறுமதி 230 கோடி டொலர்கள்**

அமெரிக்காவின் Forbes சஞ்சிகை இவ்வருடத்துக்கான இந்தியாவின் பெரிய பணக்காரர்களின் பட்டியலை நேற்று முன்தினம் வெளியிட்டிருக்கிறது.

இந்தியாவின் மிகப் பெரிய கோடீஸ்வராக றிலையன்ஸ் இன்டஸ்ரீஸின் அதிபர் முக்கேஷ் அம்பானி மதிப்பிடப்பட்டிருக்கிறார். அவரது சொத்தின் நிகர பெறுமதி 3200 கோடி அமெரிக்க டொலர்களாகும். முன்னைய வருடத்தைவிட இவ்வருடம் பெரிய கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை இருமடங்கு அதிகரித்து 52 ஆக உயர்ந்திருக்கிறது.

லண்டனை மையமாகக் கொண்டியங்கும் உலகின் பெரிய உருக்குத் தொழிற்சாலை உரிமையாளர் லக்ஷ்மி என்.மித்தால் இரண்டாவது பெரிய இந்தியக் கோடீஸ்வரராகவும் (சொத்தின் நிகரபெறுமதி 3000 கோடி டொலர்கள்) மூன்றாவது பெரிய கோடீஸ்வரராக அனில் அம்பானி (முக்கேஷின் சகோதரர்) யும் அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். இவரின் சொத்தின் நிகரபெறுமதி 1750 கோடிடொலர்களாகும். அவர்களை அடுத்து அஸிம் பிரேம்ஜி (1490 கோடி டொலர்கள்) சஷி,ரவிருய்யா (1360 கோடிடொலர்கள்) கே.பி.சிங் (1350 கோடி டொலர்கள்) ஆகியோரின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

முக்கேஷ் அம்பானியின் இவ்வருடத்தைய சொத்து கடந்த வருடத்தையும் விட 54 சதவீதம் அதிகரித்திருக்கிறது. கடந்த வருடம் அவரிடம் 2100 கோடி டொலர்கள் சொத்து இருந்ததாக மதிப்பிடப்பட்டிருந்தது. மித்தாலின் சொத்துகளின் பெறுமதி கடந்த வருடத்தையும் விட 46 சதவீதத்தாலும் அனில் அம்பானியின் சொத்துக்களின் பெறுமதி கடந்த வருடத்தையும் விட 40 சதவீதத்தாலும் அதிகரித்திருக்கின்றன.

Forbes சஞ்சிகையினால் வெளியிடப்பட்டிருக்கும் விபரங்கள் இந்தியாவிலும் சீனாவிலும் இருக்கும் பணக்காரர்களுக்கு இடையிலான பிரத்தியேக வேறுபாடொன்றை வெளிக்காட்டியிருக்கிறது. இந்தியாவின் 100 மிகப் பெரிய கோடீஸ்வரர்களின் சொத்துக்களின் பெறுமதி 27,600 கோடிடொலர்களாக இருக்கின்ற அதேவேளை, சீனாவின் 100 மிகப்பெரிய கோடீஸ்வரர்களின் சொத்துக்களின் பெறுமதி 17,000 கோடி டொலர்களாக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது என்று சஞ்சிகை தெரிவித்திருக்கிறது.

இந்தியக் கோடீஸ்வரர்கள் உலகின் ஏனைய நாடுகளில் உள்ள கோடீஸ்வரர்களைவிடவும் எவ்வாறு வித்தியாசமாக பணமீட்டுகிறார்கள் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.

தென்னிந்தியாவில் பல ஊடக நிறுவனங்களின் உரிமையாளரான கலாநிதி மாறன் இந்தியாவின் 20 ஆவது பெரிய கோடீஸ்வராக Forbes இனால் மதிப்பிடப்பட்டிருக்கிறார். தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதியின் மருமகனும் முன்னாள் அமைச்சருமான முரசொலிமாறனின் மூத்த புதல்வரான கலாநிதி மாறனின் கடந்தவருடத்தைய சொத்துக்களின் நிகரபெறுமதி 120 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது. இவ்வருடம் அது 230 கோடி டொலர்களாக அதிகரித்திருக்கிறது. Forbes சஞ்சிகையின் அட்டையில் இத்தடவை மாறனின் படமும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் மிகப்பெரிய கோடீஸ்வரர்கள் பட்டியலில் முதல் 10 பேரின் பெயர்களும் வருமாறு.

முக்கேஷ் அம்பானி, லக்ஷ்மிமித்தால், அனில் அம்பானி, அஸீம் பிரேம்ஜி, சஷி, ரவிருய்யா, கே.பி.சிங் (1350 கோடிடொலர்கள்), சாவித்திரி ஜிந்தால் (1200 கோடிடொலர்கள்) சுனில் மித்தால் (820 கோடி டொலர்கள்) குமார் பிர்லா (780 கோடிடொலர்கள்) கௌதம் அதானி (640 கோடி டொலர்கள்.

---

**சச்சின்...**

(முன்பக்கத் தொடர்ச்சி)

வெளிமாநிலத்தவர்கள் மகாராஷ்டிராவைச் சுரண்டிக்கொண்டுபோய் தங்கள் சொந்த இடங்களில் சொத்தைக் குவிக்கிறார்கள் என்று துவேஷத்தனமான பிரசாரங்களை சிவசேனை மற்றும் மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனை போன்ற கட்சிகள் பிரசாரம் செய்து வெளிமாநிலத்தவர்களுக்கு எதிராக குரோத உணர்வை வளர்த்து வருகின்றனர்.

இந்தியாவில் சகலராலும் நேசிக்கப்படுகின்ற சிறந்த கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரும் இந்த மராத்தி வெறியர்களிடமிருந்து தப்ப முடியவில்லை.

சர்வதேச கிரிக்கெட்டில் 20 வருடங்களை கடந்த வாரம் பூர்த்தி செய்திருக்கும் டெண்டுல்கர் அதை முன்னிட்டு மும்பையில் ஊடகவியலாளர்களுடன் நடத்திய சந்திப்பின்போது 'நான் ஒரு மகாராஷ்திரியன், அதைப் பற்றி நான் மிகுந்த பெருமைப் படுகிறேன். ஆனால், முதலில் நான் ஒரு இந்தியன். அத்துடன், மும்பை சகல இந்தியர்களுக்கும் சொந்தமானது' என்று குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு கூறியமைக்காக சச்சின் டெண்டுல்கருக்கு எதிராக சிவசேனையின் தலைவர் பால் தக்கரே போர்க்கொடி தூக்கியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. சிவசேனையின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'சாம்னா'வில் தனது கையெழுத்துடன் கூடிய ஆசிரிய தலையங்கமொன்றைத் தீட்டியிருக்கும் பால் தக்கரே 'கிரிக்கெட்டுடன் மாத்திரம் நின்று கொள்ளுங்கள், அரசியலுடன் விளையாட வேண்டாம்' என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்.

'உங்களது வழமையான மைதானத்தைவிட்டு அரசியல் அரங்கிற்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். மும்பை தொடர்பில் இந்தியாவில் உள்ள ஒவ்வொருவருக்கும் சமத்துவமான உரிமை இருக்கிறது என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள். சச்சின் அவர்களே உங்களது வார்த்தைகளைக் கேட்கும்போது மராத்தி இதயம் சுக்குநூறாகிறது. நீங்கள் இதைச் சொல்ல வேண்டிய தேவை என்ன? மும்பைக்குள் வெளியார் படையெடுப்பதை ஊக்குவிக்க வேண்டிய தேவையென்ன? மராத்திப் பெருமையைப் பற்றி பேசுகின்ற நீங்கள் மும்பையைப்பற்றிப் பேசி எதற்காக ஒரு ஓட்டத்தை மாத்திரம் எடுக்கிறீர்கள். மராத்தி இதயம் என்ற ஆடுகளத்தில் இருந்து நீங்கள் 'ரன் அவுட்' ஆகிவிட்டீர்கள். நீங்கள் 4 ஓட்டங்களை அல்லது 6 ஓட்டங்களை எடுக்கும்போது மக்கள் உங்களைப் பாராட்டுகிறார்கள். ஆனால், மராத்தியர்களின் உரிமைகளை மீறும் வகையில் உங்களிடமிருந்துவரும் எந்தவொரு செயலும் எந்தவொரு சொல்லும் எங்களினால் சகித்துக்கொள்ள முடியாதவை என்பதை நினைவில் வைத்திருங்கள். கிரிக்கெட் மூலம் அடைந்த பலாபலன்களை அரசியல் அரங்கிற்குள் பிரவேசித்து இழந்துவிடாதீர்கள்' என்று தக்கரே அந்த ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

சச்சின் டெண்டுல்கர் மீதான பால் தக்கரேயின் பாய்ச்சல் இந்தியா பூராவுமிருந்து பெரும் கண்டன விமர்சனங்களுக்கு உள்ளாகிவருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. மராத்தியர்கள் மும்பை நகருக்கு உரிமை கொண்டாடி போராட்டம் நடத்தியபோது சச்சின் டெண்டுல்கர் பிறந்திருக்கக் கூட இல்லையென்றும் தக்கரே கூறியிருக்கிறார். இக் கூற்றைக் கண்டனம் செய்பவர்கள் 'இன்று இந்தியாவில் வாழ்பவர்களில் அதிகப் பெரும்பான்மையானவர்கள் இந்தியா சுதந்திரமடைந்த போது பிறக்கவில்லை. அதற்காக அவர்கள் சுதந்திரப் போராட்டத்தின் பலன்களைப் பற்றிக் கருத்துகளை வெளியிடுவதற்கு உரிமையில்லையா' என்று கேள்வியெழுப்பியிருக்கிறார்கள்.

பால் தக்கரே சச்சினின் கருத்தை அரசியலாக்கிவிட்டார். குறுகிய மனோபாவத்துடன் பேசி மராத்தி வெறியைக் கிளப்பி இந்தியாவின் ஏனைய பகுதிகளில் இருந்து மகாராஷ்டிராவை தனிமைப்படுத்த தக்கரே முயற்சிக்கிறார். தக்கரேயின் போக்கு நாகரிக சமுதாயத்துக்கு ஒத்துவராது என்று கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த வருடம் மும்பை தாக்குதலுக்கு இலக்கானபோது இந்திய இராணுவம்தான் மும்பை வாசிகளைக் காப்பாற்றியது. அப்போது தக்கரேயின் சிவசேனையும் அவரது மகனின் மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனையும் எங்கே போயின? சச்சின் டெண்டுல்கரின் பரந்த சிந்தனை பாராட்டப்படவேண்டியது என்றும் கருத்துகள் பத்திரிகைகளில் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கை அமைச்சர்களின் சுற்றுலாத் தலமாக யாழ்ப்பாணம்

தென்னிலங்கை அமைச்சர்களுக்குச் சிறந்த சுற்றுலாத்தலமாக யாழ்ப்பாணம் மாறிவருகின்றது. அபிவிருத்திப் பணிகள் என்ற போர்வையில் யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா வரும் இந்த அமைச்சர்கள் சில மணித்தியாலங்கள் யாழ்ப்பாணத்தைச் சுற்றிப்பார்த்து யாழ்ப்பாண உணவு வகைகளை ஒரு பிடி பிடித்துவிட்டு நன்றாக ஓய்வெடுத்து தென்னிலங்கைக்குத் திரும்புவது இன்று அன்றாட நிகழ்வாகிவிட்டது.

யாழ்.குடாநாட்டுக்கு அமைச்சர்கள் வருவதும் போவதும் மிக வேகமாக நடைபெற்று வருகின்ற போதும் இங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் மட்டும் ஆமை வேகத்திலேயே இடம்பெற்று வருகின்றன.

யுத்தத்தால் வடக்கு, கிழக்கு பகுதிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. இதில் யாழ்.மாவட்டம் மிக மிக மோசமாகவே பாதிக்கப்பட்டது. தற்போது யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து எமது மாவட்டத்தை மிக வேகமாக அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த அபிவிருத்தி நடவடிக்கையில் அரசு போதிய ஆர்வம் காட்டவில்லையென்றே மக்கள் கருதுகின்றனர்.

'வடக்கின் வசந்தம்' என்ற பெயரில் யாழ்.மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்பட்டாலும் அதன் பயன் இன்னமும் தங்களுக்குக் கிட்டவில்லையென்றும் வடக்கின் வசந்தம் மூலம் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் என்ன என்பது தொடர்பாக இதுவரை தங்களுக்கு எந்தவிதமான தெளிவும் ஏற்படுத்தப்படவில்லையென்றும் மக்கள் கூறுகின்றனர்.

யுத்தம் முடிவுக்கு வந்தவுடன் யாழ்.மாவட்டம் உடனடியாகவே இயல்பு நிலைக்குத் திரும்புமென்று எதிர்பார்த்த மக்களுக்கு யுத்தம் முடிவடைந்து 6 மாதங்கள் கடந்த நிலையிலும் அந்த நிலை ஏற்படாமையான பாரிய ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

குறிப்பாகக் கடந்த 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடக்கம் குடாநாட்டில் அமுல்படுத்தப்பட்ட இரவு நேர ஊரடங்குச் சட்டம் இன்றுவரை முற்றாகத் தளர்த்தப்படவில்லை. ஏ-9 நெடுஞ்சாலையூடான கெடுபிடிகளற்ற சுதந்திரமான போக்குவரத்துக்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு அண்மையிலுள்ள இராணுவ, கடற்படை காவலரண்கள் இன்னும் அகற்றப்படவில்லை. வலி, வடக்கு மற்றும் பொன்னாலை போன்ற பகுதிகளிலிருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்கள் இதுவரை மீள்குடியமர்த்தப்படவில்லை. இவ்வாறான நிலைமைகளே மக்களை இந்த ஏமாற்ற நிலைக்கு இட்டுச் சென்றிருக்கின்றன.

இந்நிலையில் தென்னிலங்கையிலிருந்து வருகை தருகின்ற அமைச்சர்களால் கூட தங்களுக்கு நன்மைகள் கிட்டவில்லையென்றே மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். 'அங்கிருந்து வந்து இரண்டு, மூன்று மணித்தியாலங்கள் உலாவுகின்ற அமைச்சர்களால் எங்கள் வேதனைகளை எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்?' என்பதே மக்களுடைய கேள்வியாக இருக்கின்றது.



இவ்வருடம் மே மாதம் நடுப்பகுதியில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து யாழ்.மாநகர சபைத் தேர்தல் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து தென்னிலங்கையிலிருந்து அமைச்சர்கள் பலரும் குடாநாட்டுக்கு வருகை தரத் தொடங்கினர். ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அலுவலகமொன்று யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டு அங்கேயே பல அமைச்சர்களுடைய கூட்டங்களும் நடைபெற்றன.

யாழ்.மாநகர சபைத் தேர்தலில் அரசு தனது வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டதால் தேர்தல் பிரசாரத்திற்காகவே அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வந்தார்கள்.

அமைச்சர்களின் இந்த வருகைகளால் தாங்கள் எதிர்பார்த்த நன்மை எதனையும் பெற முடியவில்லை. எதிர்பார்த்த மாற்றம் ஏற்படவில்லை என்பதே மக்களின் குற்றச்சாட்டாகவுள்ளது.

இவற்றைவிட கடந்த அக்டோபர் மாதத்தின் பிற்பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றும் மக்களிடையே வித்தியாசமான கருத்து நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. அதாவது யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரச அதிபர் பிரிவுகளின் அபிவிருத்திக்குப் பொறுப்பாக தென்னிலங்கை அமைச்சர்கள் நியமிக்கப்பட்டமையாகும்.

இதுவரை அரச அதிபரின் கீழ் பிரதேச செயலர்களால் நிர்வகிக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு மேலதிகமாகத் தற்போது 10 வரையான அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் நியமிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும் இந்த அமைச்சர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரதேச செயலகங்களையே இதுவரை சென்று பார்வையிடவில்லை என்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், இவர்கள் ஏன் நியமிக்கப்பட்டார்கள் என்ற கேள்வி மக்களிடையே எழுந்திருக்கின்றது. இது நியாயமானதும் கூட. தமிழர்களுடைய தலைமைத்துவத்தை மட்டந்தட்டுவதற்காக இவர்கள் நியமிக்கப்பட்டிருக்கலாமென்று ஒருசாரார் கருதுகின்ற போதிலும் வரவிருக்கின்ற தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளுக்காகவே இவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களென்றும் பலர் கூறுகின்றனர்.

மின்சக்தி,எரிசக்தி அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருக்கின்றார். ஆனால், யாழ்.மாவட்டத்திலுள்ள பல பிரதேசங்கள் இன்னமும் மின்னொளி இன்றி இருளிலேயே மூழ்கிக் கிடக்கின்றன.

போக்குவரத்து அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருக்கின்றார். ஆனால், இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய அலுவலகத்தால் இதுவரை பயணிகளுக்கான சீரான போக்குவரத்துச் சேவையை வழங்க முடியவில்லை. கல்வியமைச்சர் யாழ்ப்பாணம் வந்தார். யாழ்.மாவட்டத்தில் கல்வி ரீதியாக நிலவுகின்ற பிரச்சினைகள் தீர்க்கப்படாததோடு இரண்டாயிரம் வரையான பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. இவ்வாறு மக்கள் பலவற்றையும் அடுக்கிக்கொண்டே செல்கிறார்கள்.

அண்மையில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் யாழ்.பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவியொருவர் கருத்துத் தெரிவிக்கையில்;

தற்போது யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி அமைச்சர்கள் வருகிறார்கள். யுத்தம் முடிவடைந்துள்ளதால் யாழ்ப்பாணத்தைப் பார்க்கும் ஆசையுடனேயே சுற்றுலாப் பயணிகள் போல அவர்கள் வருவதாகவே தெரிகின்றது. அவர்கள் என்ன திட்டங்களுடன் வருகிறார்களென்றோ, அதை எங்கே செயற்படுத்துகின்றார்களென்றோ தெரியவில்லை. அங்கிருந்து வந்து 3,4 மணித்தியாலங்களைக் கழித்துவிட்டுப் போகிறவர்களுக்கு யாழ்ப்பாணம் புண்ணிய பூமியாகவே தெரியும். மாறாக எங்களின் வேதனைகள் அவர்களுக்குப் புரியுமா?

படித்துப் பட்டதாரியாக வெளியேறி இதுவரை வேலையின்றி இருக்கின்றோம். சுயதொழில்களைச் செய்வதற்காக 'வடக்கின் வசந்தம்' கடன் திட்டங்களைக் கூட வங்கிகளில் பெற முடியவில்லை. வசதியானவர்கள் சிலர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி மேலும் முன்னேறுகிறார்கள். நாங்கள் தொடர்ந்தும் கஷ்டங்களுக்குள்ளேயே இருக்கின்றோம்' என்று தெரிவித்தார். இது அவருடைய வெளிப்பாடு மட்டுமல்ல. அன்றைய சந்திப்பில் கலந்து கொண்ட பலரும் இதே போன்ற கருத்துக்களையே முன்வைத்தனர்.

பொதுமக்களின் இந்த அவநம்பிக்கைகள் மட்டுமன்றி யாழ்.மாவட்டத்தில் இயங்குகின்ற சிவில் சமூகப் பிரதிநிதிகள் கூட இவ்வாறான கருத்துக்களையே முன்வைக்கின்றனர். யுத்தம் முடிவடைந்ததும் யாழ். மாவட்டம் சிறப்பாக அபிவிருத்தி செய்யப்படுமென்று கூறப்பட்டது. ஆனால், அந்த அபிவிருத்தியின் வேகத்தை எங்களால் உணர முடியவில்லையே என்று அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சின்னச் சிங்கப்பூராக மாற்ற வேண்டுமென்பது இன்று பலரது எதிர்பார்ப்பாக இருக்கிறது. உண்மையில் அது வரவேற்கத்தக்கது. குடாநாட்டு மக்கள் எவருமே இவ்வாறான அபிவிருத்திக்குத் தடையானவர்கள் அல்ல. ஆனால் முதலில் 'யாழ்ப்பாணத்தை யாழ்ப்பாணமாக' மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர். இதற்காகச் சேர்ந்து ஒத்துழைக்கவும் அவர்கள் தயாராகவே இருக்கின்றனர்.

பொதுமக்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளின் எதிர்பார்ப்புகள் புறந்தள்ளப்பட முடியாது என்பதை உரியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். முதலில் மக்களுடைய மனங்களை வெல்ல வேண்டும். அதன் மூலமே உண்மையான, நிலையான அபிவிருத்தி என்பது சாத்தியப்படும். ஆகவே மக்களின் எதிர்பார்ப்புகள் பூர்த்திசெய்யப்பட வேண்டியதன் அவசியத்தை தென்னிலங்கையிலிருந்து வருகை தருகின்ற அமைச்சர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**என்.பிருந்தாபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்களுக்கு ஆபத்து

வளிமண்டலம் மாசடைந்து புவி வெப்பம் அதிகரிப்பது உலகில் வாழும் எல்லா உயிரினங்களையும் பாதிக்கிறது என்பது தெரிந்த விடயம். நிலத்தில் வாழும் உயிரினங்களைவிட மிக அதிகமாகப் பாதிக்கப்பட இருப்பது கடல்வாழ் உயிரினங்கள்தான்.

அண்மையில் மீன் மற்றும் மீன்வளம் [ஃபிஷ் அன்ட் ஃபிஷரீஸ்] என்கிற மேலைநாட்டுப் பத்திரிகை ஒன்றில் படித்த விடயம், திடுக்கிட வைக்கிறது. புவி வெப்பமாதல் காரணமாக பல்லுயிர் பெருக்கத்துக்கு ஏற்படும் பாதிப்பைப் பற்றியும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடல்வாழ் மீன் இனங்கள் எவ்வாறு பாதிக்கப்படவுள்ளன என்பது பற்றியும் ஒரு ஆய்வே நடத்தி இருக்கிறது அந்தப் பத்திரிகை.

கடல் நீரின் தட்பவெப்பத்தைப் பொறுத்துத்தான் பலவகை மீன் இனங்கள் அந்தந்தப் பகுதியில் காணப்படுகின்றன. தட்பவெப்பம் மாறும்போது, இந்த மீன் இனங்கள் அங்கே வாழ முடியாமல் சாதகமான தட்பவெப்பம் நிலவும் பகுதியை நோக்கி நகர வேண்டும். இல்லாவிட்டால் அழிந்துவிடும் அபாயம்தான் ஏற்படும்.

குறிப்பாக பூமத்திய ரேகையையொட்டிய, வெப்பம் அதிகமுள்ள கடல் பகுதியில் காணப்படும் மீன் இனங்கள் புவி வெப்பமாவதைத் தொடர்ந்து குளிர்ப் பிரதேசங்களை நோக்கி இடம்பெயர்ந்தாக வேண்டும். அப்போதுதான் தங்களது உடல் வெப்பத்தை தகவமைத்து வாழ முடியும். ஆனால், துருவப் பகுதிகளில் உள்ள குளிரைத் தாங்கி இந்த மீன் இனங்களால் வாழ முடியுமா என்பதும் சந்தேகம் தான்.

துருவப் பகுதிகளில் மீன் இனங்களின் எண்ணிக்கை குறைவு. அப்பகுதிகளில் வாழும் உயிரினங்கள், புவி வெப்பமாதலால் பெரிய பாதிப்புக்கு உள்ளாகாது என்று ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்தப் பகுதியில் மீன்களின் எண்ணிக்கையே குறைவுதான் என்பதால் பாதிப்பும் குறைவாகவே இருக்கும் என்பதும் ஆறுதல். வெப்ப மண்டலங்களிலும் துருவப் பகுதிகளுக்குக் கீழேயுள்ள பிரதேசங்களிலும் ஏற்பட இருக்கும் புவி வெப்ப மாற்றங்கள் ஏறத்தாழ 60 சதவீதம் மீன் இனங்களின் இனப்பெருக்கத்தைப் பாதிக்கும் என்பதுதான் அச்சப்பட வைக்கும் விடயம். இந்த மாற்றம் கடல் சார்ந்த சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். கடலின் ஆழத்தின் அல்லது மேற்புறத்தில் வாழும் மீன் எவையாக இருந்தாலும் பாதிப்பு ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். உடனடி பாதிப்பு கடலின் மேற்குப் பகுதியில் வாழும் மீன்கள் இனங்களுக்குத்தான் குறைந்தது 600 கிலோமீற்றர் தூரத்திற்காவது இடம்பெயர்ந்தால் மட்டுமே வெப்பப்பகுதியில் வாழும் 90 சதவீதம் மீன் இனங்கள் உயிர் வாழ முடியும் என்று தெரிவிக்கிறது அந்த ஆய்வுக் கட்டுரை.



இந்தப் பிரச்சினை சுற்றுச்சூழல் ஆர்வலர்களை மட்டுமல்ல பொருளாதார நிபுணர்களையும் அச்சுறுத்தக் காரணம், மீன் இனங்களுக்கு ஏற்படும் பாதிப்பால் உலகில் உணவுத் தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கக் கூடும் என்பதுதான்.

இந்தியா போன்ற வளரும் நாடுகளில் ஏறத்தாழ 4 கோடி மீனவர்கள் கடலை மட்டுமே நம்பி வாழ்க்கை நடத்துகின்றனர். மீன்கள் கிடைக்காதென்றால் பல மீனவ குடும்பங்கள் தற்கொலை செய்து கொள்ளும் அவலம் நேரும்.

வளர்ந்த நாடுகளில் சுமார் 28 கோடிப்பேர் தங்களது தினசரி உணவில் மீனைச் சேர்த்துக் கொள்கிறார்கள். மீனுக்குத் தட்டுப்பாடு ஏற்படுமானால் அதன் நேரடி விளைவாக மாமிசத்தேவை அதிகரிக்கும். உலகம் புதிய சிக்கல்களைச் சந்திக்க நேரிடும்.

உலகம் முழுவதும் உணவுத் தட்டுப்பாடு பயமுறுத்திக்கொண்டிருக்கும் வேளையில் புவி வெப்பமாதலால் மீன்வளமும் குறையுமேயானல் அதன் விளைவுகள் மிகவும் மோசமானதாக இருக்கும் என்கிறார்கள் விடயம் தெரிந்தவர்கள். மேலும், மீன்பிடிப்பு குறையக்குறைய பல்வேறு நாடுகளில் பொருளாதார முன்னேற்றத்தில் பாதிப்பும், மீனவர்களுக்குத் தொழில் நசிவும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

இப்பொழுதே கடலில் முன்பு போல் மீன்கள் கிடைப்பதில்லை என்கிற குறை நிறையவே இருக்கிறது. இந்நிலையில், புவி வெப்பமடைதலும் அதனால் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட இருக்கும் பாதிப்பும் கடல் மீன்களுக்கும் அதன் இனப்பெருக்கத்திற்கும் பெரிய அச்சுறுத்தலாக மாறுமெனில் விளைவுகள் படு மோசமாக மாறிவிடும்.


இதன் உடனடித் தாக்கம் உணவுப்பஞ்சம். தொடர் விளைவு, மீன்களின் இனப்பெருக்கத்துக்கு நிரந்தரப் பாதிப்பு, உலக நாடுகள் ஒன்றுகூடி உடனடித்தேவையாக தீவிர ஆலோசனைகளை நடத்தியாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'என்னைப் பிரதமராக்கியது கல்வியே'

தன்னை ஒரு சாதாரண மனிதன் என்று வர்ணித்திருக்கும் இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன்சிங், தனது கல்வி காரணமாகவே பிரதமர் என்ற பதவிக்கு தன்னால் வரமுடிந்தது என்றும் வாழ்வை உருவாக்குவதில் கல்வி மிகவும் முக்கியமான பங்கை வகிக்கின்றது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவில் கடந்த வாரம் நவம்பர் 14 ஆம் திகதி சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அப்போது சி.என்.என், ஐ.பி.என். தொலைக் காட்சிச் சேவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்ட கலாநிதி சிங் சிறுவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார். நிகழ்ச்சி புதுடில்லியில் உள்ள அவரது வாசஸ்தலத்திலேயே இடம்பெற்று நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.



'எனக்கென்று ஈமெயில் கிடையாது. இந்தியப் பிரதமர் என்ன செய்கிறார் என்ற விவரங்கள் எல்லாவற்றையும் எனது இணையத்தளத்தில் பார்வையிடலாம்'

'நான் ஒரு சாதாரண மனிதன். ஒரு கீழ் நடுத்தர வகுப்புக் குடும்பத்தில் இருந்துவந்தவன். சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த என்னால் பிரதமராக வரமுடியுமென்றால் உங்களாலும் வரமுடியும். இன்றுநான் பிரதமராகப் பதவி வகிக்கிறேன் என்றால் அதற்கு எனது கல்வியே காரணம். வேறு ஒன்றுமேயில்லை என்று சிறுவர்களிடம் கலாநிதி சிங் கூறினார்.

உங்களை ஒரு பலவீனமான பிரதமர் என்று எதிர்க்கட்சிகள் வர்ணிக்கின்றனவே என்று ஒரு சிலர் கேட்டதற்கு பதிலளித்த கலாநிதி சிங்;

எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. நான் ஒரு விடயத்தைச் சரியாகச் செய்கிறேன் என்று நினைத்தால் எனது மனச்சாட்சி எனக்கு அதை நிச்சயம் சொல்லும். கண்டனவிமர்சனம் செய்வதே எதிர்க்கட்சிகளின் தொழில் அதற்கு நான் பயப்படவில்லை என்று பதிலளித்தார்.

தனது சிறுவர் பராயத்தை நினைவுமீட்டிய பிரதமர், தங்களது வீட்டுக்கு வந்த விருந்தினர்களின் கைக்கடிகாரமும் பணமும் காணாமல் போன ஒரு சந்தர்ப்பத்தில் அவற்றை தானே திருடிவிட்டதாகச் சந்தேகித்து தந்தையார் அடித்ததாகவும் பின்னர் அவற்றைக் களவாடியது வேறு ஒருவர் என்பது தெரியவந்ததும் தந்தையார் கவலைப்பட்டதாகவும் கூறினார்.

கலாநிதிசிங் எப்போதுமே நீல நிறத் தலைப்பாகையுடனேயே காணப்படுவார். இதற்கு என்ன காரணம் என்று சிறுவர்கள் கேட்டபோது; சிறுவயதில் நான் பல நிறங்களில் தலைப்பாகை அணிந்தேன். அது குறிப்பாக 4–5 வயதாக இருந்த போது. ஆனால், சிறுவயது முதலே எனக்கு நீலநிறம் நன்றாகப் பிடிக்கும். வளர்ந்து பெரியவனாகியதும் நீல நிறத் தலைப்பாகையையே நான் தொடர்ந்து அணிந்துவருகிறேன்.

தனக்கென்று ஒரு ஈமெயில் கிடையாது என்று சிறுவர்களுக்கு கூறிய சிங் 'இந்தியப் பிரதமர் என்ன செய்கிறார் என்ற விபரங்கள் எல்லாவற்றையும் தனது இணையத்தளத்தில் பார்வையிடலாம்' என்று குறிப்பிட்டார்.

# மெக்சிக்கோவும் கைக்கடிகாரமும்



ஜேர்மனியர், அவுஸ்திரேலியர், மெக்சிக்கோக்காரர் எனும் மூவர் விமானம் ஒன்றில் பறந்துகொண்டிருந்தார்கள்.

விமானத்தின் ஜன்னலுக்கு வெளியே கையைநீட்டி எந்த நாட்டிலிருக்கின்றோம் என்பதை கூறமுடியும் என்று மூவருமே சொன்னார்கள்.

ஜேர்மனியர் வெளியே கையை நீட்டி விட்டுச் சொன்னார் 'நாம் ஜேர்மனியில் இருக்கின்றோம்' என்று.

மற்றைய இருவரும் கேட்டார்கள் எப்படிக் கூறுகின்றீர்கள்?

கடும் குளிராக இருக்கின்றது. அதனால் தான் ஜேர்மனி என்றேன். என்று அவர் பதிலளித்தார்.

அடுத்ததாக அவுஸ்திரேலியர் வெளியே கையை நீட்டிவிட்டு 'நாம் இப்போது அவுஸ்திரேலியாவிலிருக்கின்றோம்' என்றார்.

எப்படி கூறுகின்றீர்கள் என்று மற்ற இருவரும் கேட்க 'நல்ல சூடாக இருக்கின்றது' அதனால் தான் அவுஸ்திரேலியாவில் இருக்கின்றோம் என்றேன் என்று அவுஸ்திரேலியர் பதிலளித்தார்.

அடுத்து மெக்சிக்கோ வாசி விமானத்திற்கு வெளியே கையை நீட்டி விட்டு 'நாம் இப்போது மெக்சிக்கோவிலிருக்கின்றோம்' என்றார்.

'எவ்வாறு கூறுகின்றீர்கள்' என்று மற்ற இருவரும் கேட்டபோது அவர் சொன்னார் கையை வெளியே நீட்டியபோது எனது கைக்கடிகாரம் காணாமல் போய்விட்டதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருதுகள் படும்பாடு...!

இந்தியாவின் பிரபல ஆங்கிலப் பத்திரிகையான 'த இந்து'வின் பிரதம ஆசிரியர் நரசிம்மன் ராம் அண்மைக்காலமாக அடிக்கடி விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

ஜனாதிபதியாக திருமதி சந்திரிகா குமாரதுங்க பதவி வகித்த காலகட்டத்தில் ராமுக்கு 'லங்கா ரத்னா' விருது வழங்கப்பட்டது. பின்னர் கடந்த வருடம் இலங்கையின் அரசாங்க சார்பான ஊடக அமைப்பொன்று அவருக்கு ஆசியாவின் சிறந்த பத்திரிகையாளர் விருது வழங்கி கௌரவித்தது. இந்தியாவில் வேறுபல விருதுகளையும் ராம் பெற்றிருக்கிறார்.

கடந்த வாரம் 'த இந்து' பிரதம ஆசிரியருக்கு முன்னாள் இந்திய ஜனாதிபதி பெயரில் நிறுவப்பட்டுள்ள கே.ஆர்.நாராயணன் பவுண்டேசன் இந்த வருடத்துக்கான நாராயணன் விருதை வழங்கி கௌரவித்திருக்கிறது. அடுத்த வருடம் ஜனவரி முதல் வாரத்தில் புதுடில்லியில் நடைபெறவிருக்கும் கே.ஆர்.நாராயணன் நினைவுப் பேருரை நிகழ்வில் ராம் இந்த விருதைப் பெற்றுக்கொள்ளவிருக்கிறார் என்று அந்த பவுண்டேசன் அறிவித்திருக்கிறது.



காலஞ்சென்ற ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் கேரளாவைச் சேர்ந்தவர். அவர் தனது பட்டப் படிப்பை முடித்துக்கொண்ட பின்னர் கல்லூரியொன்றில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பத்திரிகைத்துறை மீதான நாட்டம் காரணமாக நாராயணன் விரிவுரையாளர் பதவியைத் துறந்துவிட்டு 'இந்து'வில் ஒரு உதவி ஆசிரியராக (**Sub Editor**) சிறிது காலம் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. நாராயணன் இந்திய ஜனாதிபதியாகிய பின்னர் ராமுக்கு அவர் அளித்த பல பிரத்தியேகப் பேட்டிகள் தூரதர்ஷன் தொலைக்காட்சியிலும் அகில இந்திய வானொலியிலும் ஒளி, ஒலிபரப்பாகின. இந்திய சுதந்திரத்தின் பொன்விழாவையொட்டியே இந்தப் பேட்டிகள் எடுக்கப்பட்டன.

விருது கொடுப்பது கே.ஆர்.நாராயணன் பவுண்டேசனின் விருப்பம். அதைப் பெறுவது ராமின் விருப்பம். அது வேறு விடயம். இந்த விவகாரத்தை நாம் ஏன் இங்கு குறிப்பிடவேண்டியேற்பட்டது என்பதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. அதை உங்களுக்குச் சொல்லவேண்டுமல்லவா?

கே.ஆர்.நாராயணன் விருது வழங்கல் தொடர்பான அறிவிப்புகளை வெளியிடுவதற்காக விருது கமிட்டியின் தலைவரான சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் பிரதம நீதியரசர் கே.நாராயண குருப் கடந்த வாரம் (நவம்பர் 13) கேரளாவின் கொச்சி நகரில் செய்தியாளர் மகாநாடொன்றைக் கூட்டினார்.

இந்தியாவில் பத்திரிகைத் துறைக்கு மகத்தான பங்களிப்பைச் செய்துவருகின்றமைக்காகவே ராமுக்கு விருது வழங்கப்படுவதாக நாராயண குருப் அறிவித்தார்.

ராமின் 'மகத்தான' பத்திரிகைத்துறைப் பங்களிப்பில் பிரத்தியேகமாக மூன்று அம்சங்களில் அவரின் பணிகளுக்காகவே இவ்வருட விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அதில் இரண்டாவது அம்சம் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே சிறப்பான உறவுகளை வளர்ப்பதற்கு உதவுவது. மூன்றாவது அம்சம் காலநிலை மாற்றம் மற்றும் உலக வெப்பமடைதலின் விளைவான பேராபத்துகள் குறித்து வாசகர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது.

முதலாவது அம்சத்தை என்னவென்று அறிவீர்களா? தொடர்ச்சியான கட்டுரைகள் மூலமாக இலங்கையில் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தமையாகும்.

ராம் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை 'இந்து' பத்திரிகை மூலம் எந்த இலட்சணத்தில் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தார் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியுமல்லவா? விருதுகள் படும்பாட்டை யாரிடம் சொல்லி அழுவது?

## மனைவியின் பல்லைப் பிடுங்க...



ஒரு குடும்பஸ்தர் பல்மருத்துவரிடம் சென்று 'எனது பின் கடவாய்ப் பல்லைப்பிடுங்க எவ்வளவு கட்டணம் அறிவிடுவீர்கள்' என்று வினவினார்.

மருத்துவர் '80 ரூபா' என்று பதிலளித்தார்.

இது மிகவும் கூடுதலான கட்டணம். இதைவிடக் குறைக்க முடியாதா என்று குடும்பஸ்தர் கேட்டார்.

மயக்க ஊசியோ, விறைப்பு ஊசியோ போடாமல் பல்லைப் பிடுங்குவதற்கு சம்மதிப்பீர்களானால் கட்டணத்தை ஓரளவுக்குக் குறைக்க முடியும் என்று மருத்துவர் பதிலளித்தார். எவ்வளவு குறைப்பீர்கள் என்று குடும்பஸ்தர் கேட்க 60 ரூபா என்று மருத்துவர் பதிலளித்தார்.

அதுகூட மலிவான கட்டணம் இல்லை. இன்னும் குறைக்க முடியாதா என்று கேட்டார் குடும்பஸ்தர்.

விறைப்பு ஊசியை மட்டும் போட்டுவிட்டு இடுக்கியினால் பல்லைப்பிடுங்குவதானால் 20 ரூபா தாருங்கள் என்று மருத்துவர் கேட்டார்.

இன்னமும் கூட கட்டணம் மலிவானதாக இல்லை என்பதே குடும்பஸ்தரின் அபிப்பிராயம்.

சலிப்படைந்த பல் மருத்துவர் தலையைப் பிய்த்துக் கொண்டு சொன்னார். எனது மாணவன் ஒருவனைக் கொண்டு உங்கள் பல்லைப் பிடுங்குவதானால் 10 ரூபா மட்டுமே செலவாகும்.

அப்படியா மிக்க நன்றி. எனது மனைவியின் பல்லைப் பிடுங்க அடுத்த செவ்வாய்க்கிழமை நேரம் ஒதுக்குங்கள் என்று கூறிவிட்டு குடும்பஸ்தர் நடையைக் கட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளையும் நலமுடன் நாம் வாழ...

ஆரோக்கியம் என்பது உடல், உள, சமூக, ஆன்மீக மேம்பாட்டை சார்ந்த ஓர் எண்ணக்கருவாகும். மானிட சுகவாழ்வினை நாம் வெறுமனே உடல் சார்ந்ததாக கருதிவிடக் கூடாது. அவ்வாறு நம்மில் பலர் தவறாக சிந்திப்பதன் காரணமாகவே எமது சூழல் பற்றிய விழிப்புணர்வ இன்றி வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அதன் காரணமாக எம் ஒவ்வொருவருடைய சுகவாழ்வும் ஏதோவொரு வழியில் பாதிக்கப்பட்டே இருக்கிறது.

தனி மனிதர்கள் சிலருடைய கூட்டமைப்பாக குடும்பம் இருக்கிறது. குடும்பங்கள் பல சேர்ந்து சமூகமாகவும் ஒட்டுமொத்த சமூகங்களின் சேர்க்கையாக இந்த பூகோளமும் விளங்குகின்றது. நம்மில் பலருடைய சிந்தனை சிறிய வட்டத்துக்குள் நின்றுவிடுவதன் காரணமாக எமது சமூகச் சூழல் பெருமளவு ஆரோக்கியமற்றதாகக் காணப்படுகிறது. இது ஒவ்வொரு தனிமனிதனுடைய சுகவாழ்க்கையையும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிப்பதை கண்கூடாக இன்றைய நாட்களில் நாம் அவதானிக்கலாம்.

ஆதலினால் வாழ்வு நிறைவானதாக, நோயற்றதாக இருக்கவேண்டும் என விரும்புகின்ற ஒவ்வொரு தனிமனிதனும் தனக்காக வேண்டியாவது சமுதாய ஆரோக்கியத்தை பேணுதலில் பங்களிக்க வேண்டிய கடப்பாட்டை கொண்டிருக்கிறான்.

எமது சமுதாயத்தை ஆரோக்கியமாக எவ்வாறு கட்டியெழுப்பலாம்? அதற்கு நாம் என்னவெல்லாம் செய்யலாம் என சிந்தித்துப் பார்க்கும்போது எமது மனமும் சூழலும் புத்துணர்வாக இருக்க வேண்டியது முதலாவது அவசிய தேவையாகும். அவ்வாறு இருக்கும்போது மாத்திரமே எம்மால் சுயநோக்கிலும் பொது நோக்கிலும் காரியங்களை திறம்பட ஆற்றமுடியும்.

நாம் வாழும் சூழலை அதனூடாக எமது உடல், உள ஆரோக்கியத்தை கட்டியெழுப்பும் ஒரு செயற்பாடாக வீட்டுத் தோட்டங்களை கொள்ள முடியும். இதற்கு நாம் சுகவாழ்வுத் தோட்டம் எனப் பெயரிட்டுக்கொள்வோம்.

நாம் யாவரும் அறிந்த வீட்டுத் தோட்டம் என்ற விடயம் எவ்வாறு சுகவாழ்வுத்தோட்டமாக எமது வீடுகளில், பாடசாலைகளில், வைத்தியசாலைகளில், பொதுநிறுவனங்களில் பரிணமிக்க முடியும் என்பதை ஆராய்ந்து பார்ப்போம்.

எந்தவொரு முயற்சியும் பூரணத்துவமான பலனை தரவேண்டுமெனில் ஈடுபாட்டுடன் கூடிய ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டமிடலுடன் மேற்கொள்ளப்பட்டிருத்தல் அத்தியாவசியமானதாகும். அதாவது அறிவு, திறன், மனப்பாங்கு, நடத்தை என்கிற எண்ணக்கருக்களுக்குள் முயற்சி



உள்வாங்கப்படுதல் வேண்டும்.

சுகவாழ்வுத்தோட்டம் என்கின்ற முயற்சியை பொறுத்தளவில் அறிவு,திறன் ஆகியவை எம்மிடத்திலே நிறைந்திருக்கின்றன. வீட்டுத் தோட்டம் பற்றியும் அதனுடைய முகாமைத்துவம் பற்றியும் ஏற்றத் தாழ்வு பூரணத்துவமான அறிவு பலருக்கு இருக்கின்றது. அதற்கு ஊடகங்களும் மிகவும் வலுச்சேர்த்துக் கொண்டு தான் இருக்கின்றன. அதற்கான திறனும் ஒரு பிரச்சினையாக இல்லை.

மிக முக்கிய பிரச்சினையாக இன்று எம்மிடம் இருப்பது மனப்பாங்கு என்பதேயாகும். இந்த மனப்பாங்கை ஏற்படுத்துவதற்கு சிறிதளவாவது பங்களிப்பதே இந்த சிந்தனைப் பகிர்வின் நோக்கமாகும்.

வீட்டுத்தோட்டம் என்பது ஒரு வாழ்வாதார முயற்சி என்கின்ற நாம் அறிந்த ஒரு பெரும் பயனை வெளியே தூக்கி வைத்துவிட்டால் அதில் என்னதான் இருக்கமுடியும் என்று என சிந்திக்கக்கூடும். இங்கே தான் எம்முடைய பூரண ஈடுபாடும், நேர் மனப்பாங்கும் (positive attitute) தேவைப்படுகிறது.

ஒரு வீட்டுத்தோட்டத்தை ஒழுங்குபடுத்துகின்ற முறைமை அதில் பூத்துக்குலுங்குகின்ற செடிகளின் வனப்பு மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சியை மட்டுமன்றி, சோர்வான நேரங்களில் புத்துணர்வையும் மாலை வேளைகளில் பொழுதுபோக்குவதற்கு ரம்மிய சூழலையும் ஏற்படுத்துகின்றது. இது உள ஆரோக்கியத்தை பொறுத்தவரை மிகவும் முக்கியமான ஒரு அம்சமாகும். இது எம்மை அறியாமலே பதற்றம், மனக்குழப்பம் என்பனவற்றை குறைத்து உடல் சமநிலை பேணலில் பெரும் பங்கை வகிக்கின்றது.

எமது சமூகத்தின் ஒருதட்டு மக்களின் பெரிய பிரச்சினை உடற்பயிற்சி இன்மையாகும். இன்று பலர் அவதியுறும் நாட்பட்ட நோய்களுக்கு இதுவும் ஒரு காரணமாகும். இதனை வீட்டுத்தோட்டத்தில் வேலை செய்வதன் மூலம் நிவர்த்திக்க முடியும்.

எமது பிரதேசத்தில் பல பெண் பிள்ளைகள் உட்பட சிறுவர்கள் குருதிச் சோகையால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம் போசாக்கான உணவு கிடைக்காமை என்பதற்கப்பால் உணவு பழக்க முறைமையே காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. குருதிச் சோகைக்குப் பிரதான காரணமான இரும்புச் சத்துக் குறைபாட்டைக் கீரை வகைகளை வீட்டுத்தோட்டத்தில் பயிரிட்டு உண்பதன் மூலமும் இலைக்கறி மரங்களை வளர்த்து தினமும் உண்பதன் மூலமும் மிகச் சுலபமாக நிவர்த்தித்துக் கொள்ளலாம்.

ஆரோக்கியத்துடன் தொடர்பற்ற முக்கியமான விடயமாகத் தினமும் பழங்கள் சாப்பிடுவது நோக்கப்படுகிறது. நம்மில் எத்தனை பேர் அதனைச் செய்கின்றோம். இதற்கு இலகுவான வழி எமது வீட்டுத் தோட்டத்தில் பழமரங்களை நட்டு குறைந்த பட்சம் வாழை மரங்களையாவது நட்டு தினமும் பழங்களைப்பெறக் கூடியதாகச் செய்யலாம்.

எமது பிரதேச மக்களைப் பெரிதும் பாதித்துவரும் புற்றுநோயின் மூலங்களில் ஒன்றைக் குறைப்பதற்கும் வீட்டுத்தோட்டம் உதவி புரியும். எவ்வாறு எனில் அண்மைய ஆய்வுகளில் குறிப்பிட்ட புற்றுநோய்களை அதிகரிக்கும் காரணியாக மிதமிஞ்சிய களை, பூச்சி நாசினிகளின் பாவனை கருதப்படுகிறது. இதனை எமது வீட்டுத் தோட்டக் காய்கறிகள் ஊடாகக் குறைப்பதுடன் சமூகத்திற்கும் விழிப்புணர்வை வழங்க முடியும்.

மூலிகைகளை வளர்ப்பதன் வாயிலாக எமது சுதேச முறைமைகளைப் பாதுகாப்பதுடன், குறிப்பிட்ட உபாதைகளுக்கான தீர்வினையும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இவற்றிற்கு மேலாக எமக்கு பூமிப்பந்தில் ஒதுக்கப்பட்ட இடத்தை பசுமையாகப் பேணுவதன் வாயிலாக இயற்கைச் சூழலின் சமநிலையைப் பேணுதலில் எமது பங்கை சரிவரச் செய்தோம் என்கின்ற மனத்திருப்தியை அடைய முடியும். குப்பை கூளங்களை பசளையாக உபயோகிப்பதால் சூழல் அழகு பெறுவதுடன், வளங்களும் வீண்விரயமாவது தடுக்கப்படும்.

இத்தனை பயன்கள் ஒரு வீட்டுத் தோட்டத்தில் இருக்குமென்றால் நாம் ஏன் அதனைச் செய்வதற்குத் தயங்க வேண்டும். அதனை நாமும் செய்து மற்றவர்களும் பிரசாரம் செய்கின்ற சமூக ஆர்வலர்களாக மாறுவதன் வாயிலாக உண்மையான முழுமையான ஆரோக்கியம் நம் ஒவ்வொருவரையும் வந்து அடையும் என்பதில் ஐயமில்லை.

இதற்கு இந்த சுகவாழ்வு தோட்டம் என்கிற எண்ணக்கரு பாடசாலை மட்டத்திலே இளம்பராயத்தினருக்கு விதைக்கப்பட வேண்டும். இந்த விதைகள் ஒவ்வொரு குடும்பத்தையும் மாணவனூடாகச் சென்றடைந்து அவை பெருவிருட்சமாக எமது சமூகத்திற்கு நிழல் தேடித் தர வேண்டும்.

**டாக்டர் ப.நந்தகுமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டேலாவின் மன்னிப்பை அறியாமல் மறைந்த ஒரு வெள்ளையர்

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கு இப்போது 91 வயது. அவர் மிகவும் தளர்ந்து போய்விட்டார். முன்னர் போன்று பயணங்கள் செய்ய அவரால் முடிவதில்லை.

தனது மனைவியான (முன்னாள் மொசாம்பிக் ஜனாதிபதியின் மனைவி) சமோரா மச்சேலுடன் ஜோஹன்னஸ் பேர்க்கில் உள்ள தனது வீட்டில் மண்டேலா வசித்துவருகிறார்.

ஜோஹன்னஸ் பேர்க் நகருக்கு வெளியே சமோரா மச்சேல் போகவேண்டியேற்படுகின்ற சந்தர்ப்பங்களில் மண்டேலா தனிமையிலேயே இருக்க வேண்டியேற்படுகிறது. பணியாளர்கள் இருந்தாலும் அவர் மனைவியின் உதவியுடன் அலுவல்களைச் செய்வதையே விரும்புகிறார்.

மனைவி நகரைவிட்டு வெளியேபோனால் மண்டேலா சாப்பிடுவதையும் குறைத்துவிடுவாராம். அதனால், மண்டேலாவின் பழைய நண்பர்கள், இன ஒதுக்கலுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் தோழர்களை அடிக்கடி வீட்டுக்கு வந்து மண்டேலாவுடன் பேசிக்கொண்டிருக்குமாறு சமோரா மச்சேல் கேட்டுக்கொள்கிறார்.

அவரது வீட்டுக்கு அடிக்கடி வருகை தந்து மண்டேலாவுடன் பேசிப்பேசி உணவு அருந்துபவர்களில் ஒருவர் 1940 களில் அவருடன் சட்டக்கல்லூரியில் பயின்ற பீசோஸ் என்பவர் (படத்தில் மண்டேலாவுடன் காணப்படுகிறார்).

கடந்தகால அனுபவங்களை நினைவுமீட்டிப் பேசிக்கொண்டிருப்பதில் மண்டேலாவுக்கு மகிழ்ச்சி. அப்படியான அனுபவம் ஒன்று குறித்து பீசோஸுக்கு மண்டேலா அண்மையில் கூறியிருக்கிறார். அதைக் கீழே தருகிறோம்.

'நான் சட்டக் கல்லூரியில் அனுமதி பெற்று முதல்நாள் வகுப்பறைக்குச் சென்ற போது எனக்கு அருகாமையில் ஒரு வெள்ளையின மாணவன் இருந்தான். என்னைக் கண்டவுடனேயே அவன் தனது இருக்கையை மாற்றிவிட்டான். ஒரு கறுப்பினத்தவனுக்கு அருகாமையில் இருப்பதற்கு அவன் விரும்பவில்லை. விட்வாட்டர்ஸ்ராண்ட் பல்கலைக் கழகத்தின் ஒரு பிரிவாகவே அந்தச் சட்டக்கல்லூரி இயங்கியது.

'1999 ஆம் ஆண்டு அந்தப் பல்கலைக்கழகத்தின் 50 ஆவது வருடாந்த ஒன்று கூடல் நடைபெற்றது. எனக்கு அருகாமையில் இருக்கவிரும்பாமல் தனது இருக்கையை மாற்றிய அந்த வெள்ளைக் காரனையும் அந்த ஒன்று கூடலுக்கு அழைக்க நான் விரும்பினேன். ஆனால், விசாரித்துப் பார்த்தபோது அவன் ஏற்கனவே இறந்துவிட்டதாக அறிந்தேன்.



**'சட்டக்கல்லூரியில் எனக்கு அருகாமையில் இருக்க விரும்பாமல் தனது இருக்கையை மாற்றிய அந்த வெள்ளைக்காரரையும் ஒன்றுகூடலுக்கு அழைக்க விரும்பினேன்'**

'அவனை மீண்டும் சந்திக்க முடியாமல் போனது எனக்குப் பெரும் கவலை. அவனைச் சந்தித்திருந்தால் என்னை நினைவிருக்கிறதா? வகுப்பறையில் நடந்தது நினைவிருக்கிறதா? என்று கேட்டிருப்பேன். ஆனால், தயவுசெய்து அதற்காக வருத்தப்படவேண்டாம். நான் உன்னை மன்னித்துவிட்டேன் என்று தான் அவனிடம் கூறியிருப்பேன்'.

இதை மண்டேலா தன்னுடனான சம்பாசனைகளின் போது பல தடவைகள் கூறிவிட்டதாக பீசோஸ் தெரிவித்திருக்கிறார்.

அந்த வெள்ளைக்காரனை தான் மன்னித்ததை அறியாமலேயே அவன் இறந்து போனமை மண்டேலாவுக்கு மனதில் பெரும் வேதனையை ஏற்படுத்தியிருக்கிறது என்று பீசோஸ் கூறுகிறார்.



## ஒக்ஸ்போர்ட் யூனியனில் உரையாற்றிய முதலாவது ஆசிய விளையாட்டு வீரர்

உலகில் மிகவும் கீர்த்திமிக்க விவாத சபையாக (Debating Society) கருதப்படும் ஒக்ஸ்போர்ட் யூனியனில் இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் அணிக் கப்டனும் தற்போதைய ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினருமான அர்ஜுனா ரணதுங்க கடந்த வாரம் சொற்பொழிவொன்றை நிகழ்த்தியிருக்கிறார்.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 1996 ஆம் ஆண்டு இலங்கைக்கு உலகக்கிண்ணத்தைப் பெற்றுத் தந்த அணிக்குத் தலைவராக இருந்த அர்ஜுனா ரணதுங்கவை கௌரவித்து ஒக்ஸ்போர்ட் யூனியன் உரைநிகழ்த்துவதற்கு அழைத்திருந்தது.

பிரபல கல்விமான்களும் அறிஞர்களும் நிறைந்திருந்த சபையில் உரையாற்றியதன் மூலம் ஒக்ஸ்போர்ட் யூனியனில் முதன் முறையாக உரை நிகழ்த்திய ஆசிய கிரிக்கெட் விளையாட்டு வீரர் என்ற பெருமையைத் தனதாக்கிக் கொண்டார்.

அர்ஜுனா ரணதுங்கவுக்கு முன்னர் ஒக்ஸ் போர்ட் யூனியனில் உரையாற்றிய இலங்கையர்களாக முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க, முன்னாள் அமைச்சர்கள் லலித் அத்துலத் முதலி, லக்ஷமன் கதிர்காமர் ஆகியோர் விளங்கினர். அந்த வரிசையில் அர்ஜுனாவும் இப்போது சேர்ந்திருக்கிறார்.

அடுத்த ஒக்ஸ்போர்ட் யூனியன் உரையை நிகழ்த்துவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் இம்ரான் கான் அழைக்கப்பட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியோர மனிதனின் விசிறிகள்!



நடிகர், நடிகைகளின் விசிறிகள், விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் விசிறிகள், அரசியல்வாதிகளின் விசிறிகள் என பல்வேறு விசிறிகள் பற்றி அறிந்திருப்பீர்கள். நீங்களும் அவ்வாறான விசிறிகளில் ஒருவராய் இருக்கலாம். ஆனால், வீதியோரங்களிலே எப்போதும் அலைந்து திரியும் மனநலம் பாதிக்கப்பட்ட மனிதனின் விசிறிகளைப் பற்றித் தெரியுமா?

மெலிந்து ஒட்டிப் போன உருவம், குளித்து எத்தனை வருடங்கள் இருக்குமெனக் கேட்கக் கூடிய வகையில் கருமை படர்ந்த மேனி, இடையில் ஓர் அழுக்கு சாரம், பொத்தான் பூட்டப்படாத அழுக்கு சேட், குறுந்தாடி, எண்ணெய் காணாமல் செந்நிறமான சிக்குத் தலைமுடி..... இப்படியாகக் கொழும்பின் குட்டி யாழ்ப்பாணம் எனப்படும் வெள்ளவத்தைப் பகுதியில் அலைந்து திரியும் இக் கதாநாயகனுக்கென இணையத் தளத்தின் சமூக வலையமைப்பான பேஸ் புக்கில் (facebook) விசிறிகள் கிளப் உருவாக்கப்பட்டுள்ளது.

இவரின் இயற்பெயரை அறியாத இவரின் ரசிகர்கள் 'வெள்ளவத்தை' என்ற அடைமொழியுடன் மைக்கல் ஜாக்சன், கிளின்டன், பில் கேட்ஸ், ஜோர்ஜ் புஷ் என பல பெயர்கள் சூட்டி அழைத்தாலும் இவருக்கான உத்தியோகபூர்வப் பெயராக அவர்கள் பயன்படுத்தியிருப்பது 'பொப் மல்லி' என்ற பெயரே.

'வெள்ளவத்தை கதாநாயகன்- பொப் மல்லி' விசிறிகள் கிளப்பில் 1173 பேர் (கடைசியாக தரவை உறுதிப்படுத்திய போது....) விசிறிகளாக உள்ளனர். நாளாந்தம் புதிதாக விசிறிகள் இணைந்து கொண்டிருப்பதால் இத் தொகை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. புலம் பெயர்வுகளின் விளைவாக இலங்கையில் மட்டுமன்றி கனடா, மலேசியா, லண்டன், இந்தோனேசியா, சவூதி அரேபியா, குவைத், அவுஸ்திரேலியா, நியூயோர்க் என உலகளாவிய ரீதியில் இவருக்கு விசிறிகள் உள்ளனர்.


இப்படி பலரால் ரசிக்கப்படும் இவர் யார்? அது தெரிந்தவர்களை இனித்தான் தேட வேண்டும். அவரிடமும் கேட்க முடியாது. கேட்டாலும் மனநலம் பாதிக்கப்பட்ட அவரின் பதில் எவ்வாறாக அமையுமென்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்றில்லை.

பசித்தால் கடைகளில் பிச்சையெடுப்பார், தூக்கம் வந்தால் வீதிகளில் உறங்குவார், கோபம் வந்தால் தனியாக நின்று கத்துவார், தன்னைச் சீண்டும் சிறுவர்களைத் துரத்துவார் இவருக்கும் ஒரு விசிறிகள் கிளப்!

விசிறி - (fan) என்ற பதம் முதன் முதலில் பவுல் டிக்சனின் அகராதியிலேயே பயன்படுத்தப்பட்டதாகவும் குத்துச் சண்டைப் போட்டிகளைத் தொடர்ந்து பார்த்து வருபவர்களைக் குறிக்கவே இச் சொல் பயன்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இதற்கான மாற்றுக் கருத்துகள் சிலவும் உள்ளன.

இதன், கி.பி. 1525 ஆம் ஆண்டளவில் '*Fanatic*' என்ற சொல்லிலிருந்து உருவான இப்பதம் ஒரு விடயத்தில் அதிதீவிர பற்றுடையவரைக் குறிக்கப்பயன்பட்டதாகக் கூறப்படுகின்றது.

விசிறிகள் என்ற சொல் எப்படித் தோன்றினாலும் பிற்காலங்களில் விளையாட்டு வீரர்கள், விளையாட்டுகள், அரசியல் கட்சிகள், அதன் தலைவர்கள், நடிகர், நடிகைகள்,



பாடகர்கள், பாடகிகள் என குறித்த ஒருவரையோ அல்லது ஒரு விடயத்தையோ அதன் சிறப்புப் பண்பிற்காக இரசிப்பவர்களையே குறித்தது.

ஆனால், இன்று ஒரு மனநோயாளிக்கான விசிறிகளைக் கூட காலம் உருவாக்கியுள்ளது. சமூகத்தால் பொதுவாக ஒதுக்கப்படும் மனநோயாளிகளை ரசிப்பதை வேடிக்கையாகச் செய்யும் இந்த ரசிகர்கள் நாளடைவில் அவ்வாறானவர்களை நேசிக்கவும் செய்தால் அது சிறப்பான முன்னேற்றமே.

இதைத் தவிர இன்று அரசியல்வாதிகளுக்கும் நடிகர்களுக்கும் விசிறிகளாய் இருப்பவர்கள் என்ன செய்கிறார்கள்? குழுக்களாகப் பிரிந்து மோதல்களில் ஈடுபடுகின்றனர். அல்லது பாலாபிஷேகம் செய்தல்... கோயில் கட்டுதல்... என மனநோயாளிகள் போல் செயல்பட்டு தமது எதிர்காலத்தை வீணடிக்கிறார்கள்.

இவர்களுக்கு மத்தியில், நகைச்சுவைக்காக மட்டும் கருத்தில்கொண்டு பொழுதுபோக்காக மட்டும் வீதியோர மனிதனின் விசிறிகளாய் இணைந்துள்ளவர்கள் மேலானவர்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஆனால், இது போன்ற போக்கில் உலகம் போனால் யார் யாருக்கெல்லாம் விசிறிகள் உருவாவார்களோ தெரியாது. ஆனால், ஒவ்வொருவரும் நிச்சயமாக ஒரு விசிறிகள் கிளப்பில் அங்கத்துவம் பெற வேண்டியது கட்டாயமாகிப் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எம்.தயானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் புகழ் பெற்ற ஆசிரியர்கள் 03



ஆசிரியப் பணியாற்றிய எத்தனையோ பேர் உலகப் புகழ் பெற்றுள்ளனர். அவர்கள் எண்ணற்றவர்கள். அதில் ஒரு சிலரைப் பற்றி...

### ஐசக் நியூட்டன்

1642 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் திகதி பிறந்தவர் சர் ஐசக் நியூட்டன். பாடசாலைப் பருவத்திலேயே எதைப் பற்றியாவது சிந்தித்துக் கொண்டும், எதையாவது ஆராய்ச்சி செய்து கொண்டும் இருந்த ஐசக் நியூட்டன், கணிதவியலில் பட்டம் பெற்றார். அப்போது அவர் பல்வேறு பல்கலைக்கழகங்களில் பேச்சாளராகவும் சென்றுள்ளார். 1665 முதல் 1666 வரை இவர் பல்வேறு புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகம் செய்தார். அப்போதுதான் புவியீர்ப்பு விசை மற்றும் ஈர்ப்பு விசை பற்றிய கோட்பாடுகளை வெளியிட்டார். வண்ணங்களைப் பற்றியும் வானவில்லைப் பற்றியும் பல்வேறு கண்டுபிடிப்புகளை வெளியிட்டார்.

## குறுக்கெழுத்துப்போட்டி - 08

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | ■ | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | ■ | 10 |
| ■ | ■ | 11 | 12 | 13 | ■ |
| 14 | 15 | 16 | ■ | 17 | ■ |
| 18 | 19 | 20 | ■ | 21 | 22 |
| ■ | 23 | ■ | 24 | ■ | 25 |

**இடமிருந்து வலம்**

1. அதிக சனத்தொகை கொண்ட நாடு
3. இது போட்டு கோலம் போடுவார்கள்
6. செருக்கு என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
11. கானம் (குழம்பியுள்ளது)
14. வெற்றிலையுடன் போடுவது (குழம்பியுள்ளது)
18. உடல் உறுப்புகளில் ஒன்று (திரும்பியுள்ளது)
21. பெண்களுக்குரியது
24. நெருப்பு என்றும் சொல்லலாம்

**மேலிருந்து கீழ்**

1. சீதனம்
2. தூங்கும்போது காண்பது (தலைகீழ்)
3. அரவம் என்றும் சொல்லலாம் (தலைகீழ்)
5. சிற்பம் செதுக்க பயன்படுவது (தலைகீழ்)
8. திசைகளில் ஒன்று
13. கூவும் பறவையினம் (தலைகீழ்)
14. இதில் கொழுப்பு அதிகம்
15. தற்போது அவுஸ்திரேலியாவுக்கு பலர் இதில் செல்கின்றனர் (தலைகீழ்)
22. வாழை போடுவது (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப்போட்டி - 06 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. விவசாயி | 1. வில்லு |
| 5. தை | 3. சாவி |
| 7. வில் | 4. குயில் |
| 9. வலு | 10. வட்டி |
| 11. தகுதி | 12. தலை |
| 14. இடி | 13. திவசம் |
| 16. வலை | 15. இடர் |
| 18. பட்டம் | 18. பதி |
| 24. ஆர்வம் | 21. ஆம் |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**திருமதி ஸ்ரீ.சாரதா**
முளாய் வீதி, வட்டுக்கோட்டை.

### பாராட்டுப்பெறுவோர்

01. ம.கஜகிருஸ்ணா
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

02. திருமதி வி.தமிழினி
தொல்புரம்.

03. க.சுதர்சன்
தும்பளை, பருத்தித்துறை.

04. ச.ஜெயவனிதா
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

05, இ.கோபாலப்பிள்ளை
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் விடைகளை
'Saturday மெயில்'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................




## நாய் செய்திகள்

* உலகம் முழுவதும் 400 மில்லியன் நாய்கள் உள்ளன.
* மனிதன் முதலில் வளர்த்த பிராணி நாய்தான்.
* நாய்கள் தோன்றி சுமார் 14,000 ஆண்டுகள் ஆகிறது.
* கி.மு. 4,000 ஆண்டு காலக்குகை ஓவியங்களில் நாய் இடம்பெற்றுள்ளது.
* முதன்முதலில் விண்வெளியைச் சுற்றி வந்த பெருமை நாய்க்குரியது.
* நாய்க்கு 22 கோடி நுகரும் அரும்புகள் உள்ளன.



## விடுகதை

1.காலால் மிதித்தால் காற்றால் உருளும் அது என்ன?

2.அச்சு இல்லாத சக்கரம் அழகு காட்டும் சக்கரம் அது என்ன?


3.நிரப்பலாம் பிடிக்க முடியாது;உணரலாம் காணமுடியாது அது என்ன?

4.கோயில்களில் முன்னால் நிற்பார். அவர் யார்?

5.ஓங்கி வளர்ந்தவன்ஒரு பக்கம் சாய்ந்தான் அவன் யார்?

1.சைக்கிள் 2.வளையல் 3.காற்று 4.பிள்ளையார் 5.மூங்கில்

## மின்னல்



உலகில் தினமும் சுமார் எண்பது இலட்சம் மின்னல் தாக்குதல்கள் ஏற்படுகின்றன.ஒரு முறை மின்னல் தாக்கும் போது உண்டாகும் மின் அழுத்தம் பத்துக் கோடிக்கும் அதிகமான மின்சார பல்புகளை எரிய வைக்கும் பலம் வாய்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழுந்தூர் கவி வேந்தனும் வெண்பா புகழேந்தியும்

மா.ஆறுமுக கண்ணன்

இலக்கிய சுவை...

கவிஞர்களின் கற்பனைக் குதிரைகளுக்கு கட்டுகளே இல்லை. நாலுகால் நிஜக் குதிரையின் மீதேறி பயணிப்போரின் நிலைமை சில நேரங்களில் பரிதாபமாகிவிடும். கவிஞர்களின் கற்பனைக் குதிரைகளின் மீதேறி பயணிப்போருக்கோ எப்போதும் இன்பம்தான்.

உள்ளதை உள்ளபடியே கூறினால் அது வெற்றுரை. அது கவிஞர்களின் வேலையில்லை. தங்கத்தைக் கம்பிபோலாக்கி அதை அப்படியே அணிந்து கொண்டால் பார்ப்போரைக் கவராது. மாறாக அதை வளைத்தும் நவரத்தினங்களைப் பதித்தும் கோர்த்தும் அழகிய ஆரமாக்கி அணிந்தால் எத்தனை அழகு.

பொதுவாகத் தாங்கள் பார்த்த இயற்கை நிகழ்வுகளைக் கூறச் சொன்னால் அனைவரும் உள்ளது உள்ளபடி உரைப்பர். கவிஞர்களோ தங்கள் மன உணர்வுகளுக்கு ஏற்ப கற்பனைத் திறனையும் குறிப்புகளையும் கலந்து நயம்படச் சொல்லுவர்.

இயற்கையாக நடக்கும் நிகழ்வுகளில் சிறந்த உணர்வுகளைக் கற்பிக்கும் முறை கவிஞர்களிடம் உண்டு. கவிஞர்களிடத்திலேயே அத்தகைய திறமைகள் உண்டென்றால் கவிச் சக்கரவர்த்தியிடம் கேட்கவும் வேண்டுமா?

கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டம், கைகேயி சூழ்வினைப் படலத்தில் ஒரு காட்சி.

கூனியின் கூற்றுக்குக் காதுகளைக் கொடுத்த கைகேயி அவளது சூழ்ச்சிக்கு இரையாகிவிட்டாள். விளைவு நாடாள வேண்டிய இராமன் காட்டுக்குச் செல்ல வேண்டிய நிலை. அரியணையில் வீற்றிருந்து ஆளுவதைவிட்டு ஆரண்யம் சென்று வாட வேண்டியதையும் கலக்கமின்றி ஏற்றுக்கொள்கிறான் கமலப்பூ முகத்தான்.

ஆனால், வரங்களே சாபங்களாகிவிட்டதால் வேந்தன் தசரதனோ கைகேயியின் வற்புறுத்தலையும் கொடுமையையும் தாள முடியாமல் தரை மீது மயங்கி விழுகிறான்.

நடுநிசிப் பொழுதில் மன்னன் மாளிகையில் நிகழ்ந்த கொடுமையான மாற்றங்களை அறியாத நகரத்து மாந்தர். 'அதிகாலைப் பொழுது ஆனந்தப் பொழுதாக இருக்கும்' என எண்ணி நிம்மதியாய் நித்திரை கொள்கின்றனர்.

அயோத்தி நகரத்துக் கோழிகளோ கைகள் போன்ற தங்கள் சிறகுகளைப் படபடவென வயிற்றில் அடித்துக் கொள்கின்றனவாம். ஏன்?

கைகேயியின் கொடுமைகளை அறிந்த அக்கோழிகள் மனம் கலங்கி ஊரார் எல்லோரும் இப்படி உண்மையை உணராமல் உறங்குகின்றனரே என்று ஏங்கி துன்பம் தாளாமல் சிறகுகளால் தங்கள் வயிற்றில் அடித்துக்கொள்கின்றனவாம்.

இது முறையோ என்றபடி 'குய்யோ, முறையோ' எனக்கூறி ஊராரை அழைக்கின்றனவாம்.

நாட்டை ஆளும் சக்கரவர்த்தி மயங்கி விழுந்தார். பாட்டை ஆளும் கவிச் சக்கரவர்த்தியோ கோழிகளின் கூவலுக்குப் புதுப்பொருள் கற்பித்து நம்மை மயங்கச் செய்கிறார். அதை இப்படிச் சொல்கிறார்.

**'...வண்டு தங்கிய தொங்கன் மார்பன்**
**மயங்கி விம்மிய வாறெல்லாம்**
**கண்டு நெஞ்சு கலங்கி யஞ் சிறை**
**யான காமர் துணைக்கரம்**
**கொண்டு தம்வயி றெற்றி ஏற்றி**
**விளிப்ப போன்றன**
**கோழியே...'** (பா-51)

பால காண்டம், மிதிலைக் காட்சிப் படலத்தில் ஒரு காட்சி. நகரத்து வீதிகள் எங்கும் குறுக்கும் நெடுக்குமாக அழகுமிக்க கொடிகள் கட்டப்பட்டுள்ளன. அவை தங்கள் கைகளை ஆட்டி செந்தாமரைக கண்ணனாம் இராமனை 'வருக, விரைந்து வருக' என அழைப்பதுபோல இருக்கிறதாம் கம்பருக்கு.

**'...செழுமணி கொடிகள் என்னும்**
**கைகளை நீட்டி அந்த**
**கடிநகர் கமலச் செங் கண்**
**ஐயனை ஒல்லைவா என்று**
**அழைப்பது போன்ற தம்மா...'** (பா-1)

என்றார்.

நள்ளிரவில் கோழிகள் சிறகுகளைப் படபடவென அடித்தபடி கூவுவதும் கொடிகள் காற்றில் ஆடுவதும் இயற்கை. அவற்றில் தன் கருத்தை நயம்பட ஏற்றி உரைக்கும் கம்பரின் திறனுக்கு இவை ஒரு குடம் அமுதத்துக்குச் சான்றுகளாய்த் தித்திக்கும் இரு துளிகள்.

நாடறிந்த கதை நளன் கதை. அப்பழைமை வாய்ந்த கதையைத் தமிழில் 'நளவெண்பா' எனப்பாடி நிலைத்த புகழ்பெற்றார் புகழேந்திப் புலவர்.

நம்பிவந்த நங்கையை நடுநிசியில் கானகத்தில் கைவிட்டு நழுவுகிறான் நளன். தனியனாய்ப் பொறி கலங்கி நெறி மயங்க கண்போன போக்கில் கால்கள் போகின்றன.

காடுகளைக் கடந்து ஒருநாள் கடற்கரை வழியே நடந்து செல்கிறான். மணல்வெளியில் திரியும் நண்டுகள் மனிதர்களைக் கண்டதும் வளைகளுக்குள் ஓடி ஒளிந்துகொள்கின்றன. இது இயற்கைதான். இங்கும் நளனைக் கண்டதும் நண்டுகள் தங்கள் இயல்பைக் கடைப்பிடிக்கின்றன.

தன்னை மட்டும்தான் கண்டு நண்டுகள் இவ்வாறு ஓடி ஒளிந்துகொள்கின்றன எனக் கருதுகிறான் நளன். அதற்கு ஒரு புதுக்காரணத்தையும் கண்டுபிடிக்கிறான்.

காதலால் வளைத்த வளைகரத்தாளை வனத்திலே கைவிட்டுவிட்டு வரும் இந்த பாதகனைப் பார்க்கக் கூடாது என்றுதான் நண்டுகள் இவ்வாறு செய்கின்றனவோ எனக் கருதுகிறானாம் நளன்.

அதுமட்டுமா! மனைவியைப் பிரிந்த அம்மன்னன் அலைகள் வந்து கரை மோதி விளையாடும் கடலின் அழகை தன்னந் தனியனாய் நின்று காண வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதை நினைத்து மனம் புழுங்குகிறான்.

ஓயாத அலைகளைப் போல தன் இதயக் கடலிலும் துன்ப அலைகள் ஓயவில்லையே என எண்ணுகிறான்.

**'... தீவாய்**
**அரவகற்றும் என்போல**
**ஆர்கடலே மாதை**
**இரவகற்றி வந்தாய்**
**கொல் இன்று'**

(அயோத்தி வாசம், பா-356)

எனக் கடலைப் பார்த்து 'கருங்கடலே என்னைப்போல நீயும் உன் காதலியை நள்ளிரவில் பிரிந்தாயோ?' என்கிறான் நளன்.

ஓடி ஒளிவது நண்டுகளின் இயல்பு; ஓயாத அலைகள் கடலின் இயல்பு. இங்கு நளனின் மன ஓட்டத்தை அவற்றின் மேல் புகுத்திப் பாடுகிறார் புகழேந்தி. அவர்தம் கற்பனை வளத்தையும் என்ன சொல்லிப் பாராட்டுவது?

'வெண்பாவிற் புகழேந்தி விருத்தம் என்னும் ஒண்பாவில் உயர் கம்பன்' என தமிழ்கூறு நல்லுலகம் மதிப்புரை நவில்வது எத்தனை உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது வீட்டில் குடிபுகும் ஷில்பா ஜோடி



திருமணம் முடிந்த கையோடு நடிகை ஷில்பா ஷெட்டி தன் கணவர் ராஜ் குந்த்ராவுடன் ஜுஹு கடற்கரையில் உள்ள ஜல்சா பகுதியில் கட்டப்பட்டுள்ள புதிய வீட்டுக்குக் குடிபோகிறார். இங்குதான் அமிதாப்பின் பிரமாண்ட வீடு அமைந்துள்ளது. லண்டன் வாசியான ராஜ் குந்த்ரா, திருமணத்துக்குப் பிறகு மும்பைக்கு குடியேற சம்மதித்துவிட்டதில் ஷில்பா ஷெட்டி மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளாராம். கொஞ்ச நாள் மும்பையிலும் பெரும்பாலான நாட்கள் லண்டனிலும் வசிக்கத் திட்டமிட்டுள்ளதாம் ஷில்பா – ராஜ் குந்த்ரா ஜோடி. மேலும் மும்பையில் மிகப் பிரமாண்டமான மாளிகை ஒன்றையும் ஷில்பாவுக்கு வாங்கியுள்ளார் ராஜ் குந்த்ரா. ஆனால் அந்த வீட்டில் இன்னும் அலங்கார வேலைகள் பாக்கியுள்ளன. இந்தப் பணியில் தீவிரமாக இறங்கியிருப்பவர் சூஸன். இவர் வேறு யாருமல்ல, நடிகர் ஹிரித்திக் ரோஷனின் மனைவி. புதிய மாளிகை தயாராகும் வரை வேறு வீட்டில் குடியிருக்க முடிவு செய்த ஷில்பா ஜோடி, பிரபல தயாரிப்பாளர் வாசு பக்னானிக்குச் சொந்தமான சொகுசு பங்களாவை தேர்ந்தெடுத்துள்ளனர். இது மும்பை ஜல்ஸா பகுதியில் அமிதாப் பச்சனின் வீட்டுக் குப் பக்கத்தில் அமைந்துள்ளது.

## Saturday சினிமா



'பா'

அமிதாப்பச்சன் - அபிஷேக்பச்சன்

## பொங்கலுக்கு 'ஆடுகளம்'

பொல்லாதவன் வெற்றிக் கூட்டணியின் அடுத்த படைப்பு ஆடுகளம். இயக்குனர், தயாரிப்பாளர், நாயகன், இசையமைப்பாளர், ஒளிப்பதிவாளர் என முக்கிய தொழில்நுட்பக் கலைஞர்களில் எந்த மாற்றமுமில்லை. ஒரே மாற்றம் கதாநாயகி. மதுரையை களமாகக் கொண்டு தயாராகியிருக்கிறது வெற்றிமாறனின் இரண்டாவது படம். தனுஷ் லோக்கல் இளைஞனாக வருகிறார். அவருக்கு ஆசானாக முக்கியமான வேடத்தில் நடித்திருப்பவர் ஈழக் கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன். படத்தின் பெரும்பாலான காட்சிகள் அனைத்தும் முடிந்த நிலையில் டப்பிங் பணிகள் சென்னையில் நடந்து வருகின்றன. பாடல் காட்சிகள் மற்றும் சில வேலைகள் முடிந்தால் ஆடுகளம் பூசணிக்காய் உடைக்கத் தயாராகிவிடும். அடுத்த வருடம் பொங்கலுக்குப் பின் படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளனர்.

## ஆர்யாவுடன் நயன்

நடிகர் ஆர்யாவுடன் நடிகை நயன்தாரா ஜோடி சேரும் பாஸ் என்கிற பாஸ்கரன் படத்தின் பூஜை நடந்தது. சிவா மனசுல சக்தி படத்திற்குப் பிறகு டைரக்டர் ராஜேஷ் இயக்கும் இந்த புதிய படத்திற்கு யுவன்சங்கர் ராஜா இசையமைக்கிறார். அனைத்து பாடல்களையும் நா.முத்துகுமார் எழுதுகிறார். சென்னை 28, சரோஜா, கோவா படங்களை ஒளிப்பதிவு செய்த ஷக்தி சரவணன்தான் இப் படத்திற்கும் ஒளிப்பதிவு செய்கிறார்.

தஞ்சை, கும்பகோணம், திருச்சி, மைசூர் உள்ளிட்ட இடங்களில் படப்பிடிப்பை நடத்த திட்டமிட்டிருக்கிறார் டைரக்டர் ராஜேஷ். கிராமம் மற்றும் நகரத்தை மையமாக வைத்து இப் படம் உருவாகப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.



'சிங்கம்' சூர்யா

## வல்லுறவுக்குத் தயார்...



பாலியல் வல்லுறவுக்காட்சியில் நடிக்க எனக்கு பயமில்லை. ஒரு முறை நடித்த பிறகு அந்தக் காட்சியில் நடிக்க எனக்கு தயக்கம் போய்விட்டது என்றார் கீர்த்தி. சாவ்லா கீர்த்தி சாவ்லா நாயகியாக நடித்த ஸவேதா என்ற படம் சமீபத்தில் வெளியாகியுள்ளது. இந்தப் படத்தில் வல்லுறவுக் காட்சி ஒன்றில் நடித்துள்ளார் கீர்த்தி சாவ்லா. இந்தக் காட்சியை இப்போது இணையத்தளத்தில் பரப்பி வருகிறார்கள் சிலர். பிரபலமில்லாத படத்துக்கு இது மிக உதவியாக இருப்பது தெரிந்ததும் உற்சாகமாக அது தொடர்பான செய்திகளைப் பரப்பி வருகிறார் தயாரிப்பாளரும். இதுபற்றி கீர்த்தி சாவ்லா கூறுகையில், 'படத்தின் கதையே அந்த காட்சியில் இருந்ததால்தான் வல்லுறக் காட்சியில் நடிக்க நான் சம்மதித்தேன். அந்தக் காட்சியை இரண்டு நாட்கள் படமாக்கினார்கள். பயப்படும்படியாக எதுவும் நடக்கவில்லை. அதனால் துணிச்சலுடன் அந்த காட்சியில் நடித்தேன். ஆனால், படம் வெளிவந்து இரண்டு நாட்கள் ஆவதற்குள், நான் நடித்த காட்சிகளை 'நெட்டில்' பரவவிட்டது மன்னிக்க முடியாத குற்றம்...' என்றார். தொடர்ந்து இது போன்ற வல்லுறவுக்காட்சியில் நடிப்பீர்களா? ஒரு முறை நடித்து விட்டதால், எனக்கு பயம் போய்விட்டது. அதனால், கதைக்கு அவசியமாக இருந்தால் வல்லுறவு காட்சியில் நடிப்பதில் எனக்கு எந்த தயக்கமே இல்லை என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜய்க்கு ஆசைப்படும் சுனைனா

விஜய்யுடன் ஜோடி சேர யாருக்குதான் பிடிக்காது, எந்த நடிகை நம்பர் வன் என்ற போட்டியில் வெற்றிபெற அஜித், விஜய்யுடன் ஜோடி சேர்வதுதானே அளவுகோல். அசின், த்ரிஷா இருவரும் வடக்கு நோக்கி பயணப்பட்ட பிறகு இரண்டாம் வரிசை நாயகிகளின் காட்டில் பேய் மழை. நான்தான் நம்பர் வன் என்று தமன்னா தம்பட்டம் அடிக்கும் அளவுக்கு இருக்கிறது. வெள்ளப்பெருக்கு போகட்டும் சுனேனா கதைக்கு வருவோம். காதலில் விழுந்தேன், மாசிலாமணி என சுனேனா நடித்த இரு படங்களும் சன் பிக்சர்ஸின் விளம்பரத்தால் ஓடியவை. மேலும் வேறு நடிகைகள் கிடைக்காமல் இவரை பல படங்களில் ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். உதாரணம் வேண்டுமென்றால் பேரரசுவின் திருத்தணி இருக்கிறது. இதில் பரத் ஜோடியாக நடிக்க த்ரிஷாவைத்தான் கேட்டிருந்தனர். பேரரசுவின் அதிகபடி மசாலா உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது என்றோ, இந்திப்படம் இருக்கிறது என்றோ, த்ரிஷா கால்ஷீட் தரவில்லை. அந்த இடத்தை நிரப்ப சுனேனாவை போட்டிருக்கிறார்கள். அப்படி சப்டியுட்டாகத்தான் விளையாடிக்கொண்டிருக்கிறார். இந்நிலையில் விஜய்யுடன் நடிக்க ஆவலாக இருக்கிறேன் என பிட்டை போட்டிருக்கிறார் சுனேனா. நாயகி பஞ்சம் அந்தளவுக்கு மோசமா என்று திகிலடித்துப் போயிருக்கிறது திரையுலகம்.



# 30 நாட்களில் 'முறியடி'

'நான் அவன் இல்லை' இரண்டாம் பாகத்தை இயக்கி முடித்திருக்கும் செல்வா, இதையடுத்து 'முறியடி' என்ற படத்தை இயக்குகிறார். இதில் 'அபியும் நானும்' 'உன்னைப்போல் ஒருவன்' படங்களில் நடித்த கணேஷ் வெங்கட்ராம் கதாநாயகனாக நடிக்கிறார். ரம்யா நம்பீசன் கதாநாயகியாக நடிக்கிறார். வேகமாக ஓடும் இன்றைய வாழ்க்கையில் அடுத்தவர்களுக்கு உதவி செய்வது என்பது முடியாத காரியமாகிவிடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒரு சாதாரண மனிதன் ஓர் இக்கட்டான சந்தர்ப்பத்தில் இன்னொருவருக்கு உதவி செய்கிறான். இதனால் அவன் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வித்தியாசமான திரைக்கதையில் வெளியிடப்படுத்துவதே கதை. கவிதாலயா நிறுவனம் சார்பில் கே.பாலசந்தர் தயாரிக்கும் இந்தப் படத்தை பொள்ளாச்சி, பாலக்காடு, செங்கோட்டை, ஆகிய இடங்களில் தொடர்ந்து 30 நாட்களில் முடிக்கத் திட்டமிட்டிருக்கிறார் இயக்குநர் செல்வா.

# முதல்வராகும் ஷாம்

கிக் படத்தில் பொலிஸ் அதிகாரியாக நடித்திருக்கிறார் ஷாம். கொஞ்சம் முரட்டு பொலிஸ் அதிகாரி. ஆந்திர ரசிகர்களுக்கு அந்தப் பாத்திரம் பிடித்துவிட்டது. பெரிதாக ஒரு வாய்ப்பை இப்போது அவருக்கு வழங்கியிருக்கிறார்கள். விமான விபத்தில் அகால மரணமடைந்த ஆந்திராவின் முன்னாள் முதல்வர் இராஜசேகர ரெட்டியின் வாழ்க்கை வரலாறு தெலுங்கில் படமாக எடுக்கப்படுகிறது. அரசியலைத் தாண்டி மக்களால் நாயகனாக பார்க்கப்பட்ட மனிதரின் கதை என்பதால் ரொம்பவே கவனமாக திட்டமிட்டிருக்கிறார்கள். இந்தப் படத்தில் இளவயது இராஜசேகர ரெட்டியாக நடிக்க ஷாமை தேர்வு செய்துள்ளனர். இளவயதில் ஷாமைப் போல ரெட்டியும் கட்டுமஸ்தான உடம்புடன் இருந்திருக்கிறார். தெலுங்கு திரையுலகில் இந்தப்படம் தனக்கு திருப்புமுனையாக இருக்கும் என நம்புகிறார் ஷாம். நம்பிக்கை பலிக்கட்டும் கொசுறு செய்தி. ராம்கோபால் வர்மா இயக்கும் ரத்த சரித்ரா படத்தில் முன்னாள் ஆந்திர முதல்வர் என்.டி.ஆராக சத்ருகன் சின்கா நடிக்கிறார். இந்தப்படத்துக்காக முப்பது வருடங்களுக்கு மேலாக தான் பராமரித்து வந்த மீசையை தானம் செய்திருக்கிறார் சின்கா.



'கச்சேரி ஆரம்பம்'
ஜீவா - பூனம் பஜ்வால்

# கரணுக்கு கமல் கொடுத்த இன்ப அதிர்ச்சி


கரணின் அடுத்தபடம் கனகவேல் காக்க. படத்தின் ஒடியோவை வெளியிட தீர்மானித்திருந்த நேரம் கமலிடமிருந்து அழைப்பு. தனது அலுவலகத்தில் வைத்தே கனகவேல் காக்க ஆடியோவை வெளியிட்டு கரணுக்கும் அவரது குழுவுக்கும் இன்ப அதிர்ச்சி தந்திருக்கிறார் கமல். சினிமாவில் தனது குருநாதர் கமல்ஹாசன் என்பதை எந்த மேடையிலும் பதிவு செய்ய கரண் தவறுவதில்லை. நம்மவர் படத்தில் அவருக்கு ஒரு பிரேக்கிங் ரோல் கொடுத்தவரும் கமல்தான். கரணின் கொக்கி படவிழாவில் கமல் கலந்து கொண்டது தொடங்கி பல விஷயங்களை இந்த குரு சிஷ்ய உறவுக்கு ஆதாரமாக அடுக்கிக் கொண்டே போகலாம். கனகவேல் காக்க படத்தின் ட்ரெய்லர் மற்றும் பாடல்களை தனது ஹோம் தியேட்டரில் பார்த்து ரசித்த கமல் படம் வெற்றிபெற வாழ்த்துகளையும் தெரிவித்திருக்கிறார்.



'நான் அவன் இல்லை-2'
ஜீவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...



# ராஜீவ் ஷா

அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைப்பின் (USAID) தலைவராக அமெரிக்க-இந்தியரான ராஜீவ் ஷா ஜனாதிபதி பராக் ஒபாமாவால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமெரிக்காவின் அதியுயர் நிறுவனம் ஒன்றிற்கு வெளிநாட்டவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை சகலருக்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், ராஜீவ் ஷாவின் பெற்றோரும் அகில இந்தியாவும் இவருக்கு இப் பொறுப்புமிக்க பதவி கிடைக்கப் பெற்றுள்ளமையையிட்டு பெருமகிழ்வும் கர்வமும் கொண்டிருக்க வேண்டும்.

அதேவேளை, அமெரிக்காவில் பிறந்திருந்தாலும் பிறிதொரு நாட்டவருக்கு அவரின் திறமை காரணமாக அந்நாட்டின் உயர்பதவி ஒன்றை அந்நாட்டு அரசாங்கம் வழங்கியுள்ளது.

ஒரு நாட்டின் சொந்த மக்களுக்கே சாதாரண ஒரு பணி நியமனமோ அல்லது வாய்ப்போ வழங்குவதற்கு துவேசம் கொண்ட அரசாங்கங்களும் தனியார் நிறுவனங்களும் இழுத்தடிப்புகளும், சாக்குப்போக்கான காரணங்களும் கூறி புறக்கணிக்கும் நிலையில் பிறிதொரு நாட்டின் பிரஜை ஒருவருக்கு உயர் பதவி ஒன்றை வழங்கத் தீர்மானித்துள்ள அமெரிக்க அரசின் செயற்பாட்டை மெச்சாமல் இருக்கமுடியாது.

இதிலிருந்து அமெரிக்க அரசின் ஜனநாயக ஆட்சி முறையையும் இனத்துவேசம் அற்ற தன்மையையும் கண்டுகொள்ளக் கூடியதாக உள்ளது.

1960 களின் பிற்பகுதியில் அமெரிக்காவின் மிச்சிக்கன் மாநிலத்திலுள்ள ஆன் ஆர்பர் பகுதியில் குடியேறிய இந்திய பெற்றோருக்கு 1973 மார்ச் 9 ஆம் திகதி ராஜீவ் பிறந்தார்.

பின்னர் டெட்ராயிட் பகுதியில் வளர்ந்ததுடன் வெய்ல் குரோ உயர் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தார்.

மருத்துவக் கற்கை நெறிகளுக்கான பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் எம்.டி பட்டத்தைப் பெற்றுக் கொண்டதுடன் அதே பல்கலைக்கழகத்தின் வார்தன் பிரிவிலிருந்து சுகாதாரப் பொருளாதாரத்திற்கான எம்.எஸ்.சி. பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

அத்துடன் லண்டன் பொருளியல் கல்லூரியில் தனது மேற்படிப்பையும் தொடர்ந்திருந்தார் ராஜீவ்.

ராஜீவின் சகோதரி அமெரிக்காவில் மருத்துவராகப் பணிபுரிந்து வருகின்றார்.

இதேவேளை, ராஜீவின் மனைவி சிவம் மாலிக் ஷா அமெரிக்க கல்வி அமைச்சின் பணிப்பாளராகப் பணிபுரிந்து வருகின்றார். ராஜீவ் சிவம் தம்பதிகளுக்கு சயன், அம்னா என்ற இரு குழந்தைகள் உள்ளனர்.

தற்பொழுது கல்வி மற்றும் பொருளாதார ஆராய்ச்சி நிலைய உப செயலாளராகப் பணியாற்றிவரும் ராஜீவ் அமெரிக்க விவசாய திணைக்களத்தின் தலைமை விஞ்ஞானியாகவும் பணிபுரிந்து வருகின்றார்.

2200 சுயாதீன விஞ்ஞானிகள் உள்ளிட்ட 10 ஆயிரம் பணியாளர்கள் ராஜீவின் கீழ் பணிபுரிந்து வருகின்றனர்.

2.6 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தும் பொறுப்பு ராஜீவிற்கு உள்ளது.

ஏழை மக்களுக்கான உதவி வழங்கும் அமைப்பான பில் அன்ட் மெலின்ட் கேற்ஸ் அமைப்பில் தலைமைத்துவ வரிசையில் ராஜீவ் பணியாற்றியுள்ளார்.

அத்துடன் உலக சுகாதார அமைப்பிலும் (WHO) ராஜீவ் பணியாற்றியுள்ளார்.

இவ்வாறாக பல உயர் நிறுவனங்களில் பணியாற்றிய ராஜீவை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா யு.எஸ்.எய்ட்டின் தலைமைப் பதவிக்கு தெரிவுசெய்துள்ளார்.


இவரை அப்பதவிக்கு அமெரிக்க காங்கிரஸ் அனுமதிக்கும் பட்சத்தில் அமெரிக்க நிர்வாகத்தின் அதியுயர் பதவி வகிக்கும் அமெரிக்க இந்தியர் என்ற பெருமை ராஜீவைச்சாரும்.

அமெரிக்காவுக்கான தனிக் குடியுரிமையற்ற ஒருவருக்கு சர்வதேச விவகாரங்களை கையாளும் உயர்பதவி வழங்கப்பட்டிருப்பதைப் பார்த்து ஏனைய அரசுகளும் துவேசப் போக்கை விட்டு பதவிகளையும் நியமனங்களையும் அரசியல் அந்தஸ்துகளையும் தன்னாட்டின் சகல பிரஜைகளுக்கும் இனம்,மதம், மொழி, தோகை வேறுபாடின்றி வழங்கவேண்டும்.

**யோ. நிமல்ராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அனுமதி தர மறுக்கிறாள் அம்மா

நான் பறவைகளைக் காதலித்தேன்,
பழக்கப்படுத்தியவள் அம்மா!
நிலாவைக் காதலித்தேன் - அதைக்
காட்டியே அமுதூட்டியவள் அம்மா!
ஆடு, மாடு, நாய், பூனைகள் என
அனைத்தையுமே காதலித்தேன் அரு
கில் கொண்டு சென்று
அணைக்கக் கற்றுத் தந்தவள் அம்மா!
இயற்கையைக் காதலித்தேன்,
இறும்பூது எய்தினாள் அம்மா!
பேனா, பென்சிலுடன் புத்தகத்தைக்
காதலித்தேன்,
புன்னகை பூத்து நின்றாள் அம்மா?
கற்ற பாடசாலை, கற்பித்த ஆசான்கள்
கையெடுத்து வணங்குகின்ற கடவுளர்
அனைவரையும் கருணையுடன் காத
லித்தேன்
களிப்போடு முகம் காட்டிக் கனிவோடு
வரவேற்றாள் அம்மா!
என்னைப் பிரசவித்த நாள் முதலாம்
எவற்றையெல்லாம் சொன்னாளோ...
அவற்றையெல்லாம் காதலித்தேன்,
மறுபேச்சுப் பேசவில்லை அம்மா?
ஆனால்...,
இன்று ஒரு பருவப் பெண்ணை
காதலிக்கின்றேன்...
அதற்கு அனுமதி தர மறுக்கின்றாள்
அம்மா!
ஏனெனில்...
அதனை அவள் எனக்கு
கற்றுத்தரவில்லையாம்...

**பொன்னாலையூர்,**
**என்.சங்கர்**

## ஜாக்கிரதை

கவிஞனின் கவிதைகளில்
கற்பனைகள் மிக மிளிரும் - அதில்
காதலின் உணர்வையும்
தூண்டிவிடுவதில் சமர்த்தன்
அவ்வகையில் சில வரிகள்
வாசகர்களையும் அடிமைப் படுத்திவிடும்
அவ்வியாதி காதல் வியாதியாகவும்
தோன்றும், வாசகர்களே ஜாக்கிரதை!

**கந்த.ஞானமுத்து,**
**கைதடி மேற்கு -02.**

## மாயை

ஒரு நாணயத்தின்
இரண்டு பக்கமும் போல் – உன்
உள்ளமும் இருக்கின்றதே
எப்படி...?
என்னையும் காதலித்துக் கொண்டு
காதலையும் காதலிக்கிறாயே...!

**சா.ரமேஸ்குமார்,**
**மீசாலை கிழக்கு.**

## புன்னகையே இது உனக்காக...!



என் இதயத்தில்
தேக்கி வைத்த
உன் இனிமையான
நினைவுகள்
எந்த நிலையிலும்
பிறருக்குத் தெரியாதவை
அந்த நினைவுகளுடன்
நான்
செத்து மண்ணோடு
கலக்கும் போதும்
அவை அழியாது உயிர்க்கும்
நான் மரணித்த போதும்
மனதுக்குள் உன் நினைவுகள்
பசுமையாய் என் இதயத்திற்கு
உயிர் ஊட்டும் – அந்த
உயிர் ஊட்டம்
உன்னுடன் நான்
வாழ்வதற்கல்ல
உன்னைத் தினம்
வாழ்த்துவதற்கே...!

**மகே - மேனன்**
**கொற்றையூர்**

## எண்ணக் கனவுகளுடன்...

எண்ணங்கள் இனிய
வண்ணங்களாகி
சிந்தனையில் செய்து
அனைத்தும் நலமாகி
இனிதான உன் வாழ்வில்
இன்பங்கள் பெருக
இப் புவிதனில் எந்நாளும்
சமாதான ஒளி பிரகாசிக்க
இன்புற்றிருக்க வேண்டுமென
இறைஞ்சி நிற்கிறேன்
எண்ணக்கனவுகளுடன்

**கந்த.ஞானமுத்து,**
**கைதடி மேற்கு -02.**

## படித்ததில் சுவைத்தது

தமிழனாய் பிறந்ததினால்
காலிழந்தோம் கையிழந்தோம்
கண்ணிழந்தோம் விண்ணிழந்தோம்
நாடிழந்தோம் படிப்பிழந்தோம்
நோய்க்கிரையாய் நாம் விழுந்தோம்
ஒளியிழந்தோம் அணியிழந்தோம்
அடுப்பிழந்தோம் செருப்பிழந்தோம்
தோளிழந்தோம் தொழிலிழந்தோம்
தேய்ந்து தொலைந்தோம்
நாம் இன்று படும்பாட்டை எல்லாம்
உயிர்த்த மனிதர் கூற்றினிலே
கவிஞர் முருகையனின் கவிதனிலே
ஏற்கனவே வடித்துவிட்டார்
இதனை என்னால்
படித்துச் சுவைக்க முடிந்ததே ஒழிய
தீர்வுகாண முடியவில்லையே


**எஸ்.சர்மி, இணுவில்**

கனிவாகக் கேட்டேன்
காதல் இல்லை
என்றாய்
கண்டனீர்கள் வடித்
தேன்
கவனியாது இருந்தாய்
கதறி அழுதேன்
கடைசிவரைக்கும்
இல்லை என்றாய்
நீ கூறியது போல்
பூட்டும் சாவியும் என்னி
டம் தான்
உன்னைத் தீண்ட...
நிரபராதியாகிய
கைதியாய்
என் மனதில்
துப்பாக்கி முனையில்
நானோ
காவலாளியாக
உன் அருகில்
உறவுமில்லாத
பகையுமில்லாத
நிலையில்...

**வி.லக்சிகா**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமெனால்
**'Saturday மெயில்'**
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நுளம்புகளை விரட்டி நோயை வரவேற்கிறீர்கள்

நுளம்புத் தொல்லையி லிருந்து தப்பிக்கவும் இரவு நன்கு தூங்கவும் நுளம்புவர்த்தி சுருள், மேட், கிறீம் முதலியவற்றை உபயோகப் படுத்து கிறோம் அல்லவா? இவற்றால் நம் ஆரோக்கியத்திற்கும் பணத்திற்கும் கேடு என்கின்றனர் விஞ்ஞானிகள்.

நுளம்புச் சுருள்களிலும் மேட்க ளிலும் செயற்கையாகத் தயாரிக் கப்பட்ட அலெத்ரின், டாலத்ரின் டி டிரான்ஸாலத்ரின் போன்ற இரசாயனங்கள் பயன்படுத்தப்படு போன்ற செயல்களாலேயே பிராண வாயு மிகவும் குறைந்து விடுகிறது. இதோடு புகையும் கேடு விளைவிக்கும் வாயுக்களும் வீட்டினுள் நிறைந்து விடுகின்றன. போதாக்குறைக்கு இருட்டியதுமே நுளம்பு விரட்டிக ளையும் பயன்படுத்த ஆரம்பித்து விடுகிறார்கள்.

இதனால் வீட்டில் இருந்த சிறிதான பிராணவாயுவும் கெட்டு விடுகிறது. ஆக, இரவு முழுவதையும் மாசுக் காற்று உள்ள சூழ்நிலையிலேயே கழிக்கிறார்கள். நுளம்பு விரட்டிகளில் கோட்டையைப் போல நோய் எதிர்ப்பு சக்தியை இழந்த உடலைப் பெற்று விடுகிறது. பிறகு நோய்களின் வரு கைக்குக் கேட்க வேண்டுமா?

தொடர்ந்து நுளம்பு விரட்டி உபயோகித்து வருகிறவர்களுக்கு நுரையீரலில் ஒருவித ஒவ்வாமை ஏற்பட்டு முழுமையாக விரிவடையா மலும் அதன் கொள்ளளவுக்குண் டான காற்றை செயற்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள இயலாமலும் போய்விடுவதாக பல ஆய்வுகள் நிரூபித்துள்ளன. நுளம்பு விரட்டிக கின்றன. இந்த இரசாயனங்களின் அடர்த்தி நாம் இக்காற்றை சுவாசிக் கும் காலம், அறையினுள் வரும் புதிய காற்றின் அளவு ஆகியவற் றைப் பொறுத்து நமக்கு விளைவிக் கப்படும் தீங்குகள் அளவு நிர்ண யிக்கப்படுகிறது.

மக்கள் நுளம்புகளுக்குப் பயந்து மாலை ஆறு மணிக்கே ஜன்னல், கதவுகளை எல்லாம் அடைத்துவிட்டு புதிய காற்று வீட்டுக்குள் வருவதை தடை செய்து விடுகின்றனர். இவ் வாறு அடைபட்ட காற்றுக்குள்ளேயே விளக்கு எரிப்பது, சமைப்பது, குடும் பத்தார் அனைவரும் சுவாசிப்பது உடலில் சேர்ந்த விஷத்தை வெளி யேற்ற சளிபிடித்தல், காய்ச்சல் ஆகி யவை ஏற்படுகின்றன. சுத்திகரிப்பு நடக்காததால் மருந்து சாப்பிட்டும் குணம் பெற முடிவதில்லை. மூன்று நாட்களில் இவை குறையாததால் அலர்ஜி என்று பெயர் சூட்டி அந்தச் செயலை முடக்க ஒவ்வாமையைக் குணப்படுத்தும் மருந்துகளையும் ஆரோக்கியமாக உடல் தாக்குப் பிடிக் காமல் திணறுகிறது. அதே நேரத்தில் உடலுக்கு ஒவ்வாத பொருட்களை வெளியேற்றும் செயல்முறை படிப் படியாக இழந்து விடுகிறது. இதன் மூலம் படைவீரர்களை இழந்த ளில் பயன்படுத்தப்படும் இரசாயனம் சிலருக்கு மலட்டுத் தன்மையை ஏற்படுத்த வல்லது என்கிறார்கள். நுளம்புவிரட்டியில் உள்ள டயோக் சின் புற்று நோயை உருவாக்க வல்லது. அலெத்ரின் மனிதர்களின் உடல் எடையை மெல்ல இழக்கச் செய்யவல்லது. மேட் புகையை பிஞ் சுக் குழந்தைகள் இரவு முழுவதும் சுவாசித்தால் வலிப்பு நோய் ஏற்ப டலாம் என்கிறது லக்னோ கிஸ் ஜோர் ஜின் மருத்துவப் பல்கலைக்கழகம். நுளம்புகளைத் தடுக்க ஒரே எளிய வழி பாதுகாப்பானது, சிக்கனமா னதுமான நுளம்பு வலை மட்டுமே.

# இறுதி மூச்சுவரை...

என் இறுதி மூச்சு உள்ளவரை கவர்ச்சியாய் இருக்க வேண்டும், தோன்ற வேண்டும் என்பதே என் ஆசை என்று கூறியுள்ளார் பிரபல ஹொலிவுட் கவர்ச்சி நடிகை பமீலா ஆண்டர்சன்.

42 வயதாகும் பமீலா ஆண்டர்சன் எண்பதுகளின் இறுதியில் தொடங்கி, இன்று வரை நடிகையாக, தயாரிப்பாளராக, பேஷன் அழகியாக, தொலைக்காட்சி தொகுப் பாளராக, டான்ஸராக கலக்கி வருகிறார்.

இன்றும் ஏதாவது ஒரு நிகழ்ச்சிக்கு பமீலா செல்கிறார் என்றால், அடுத்த நாள் ஊடகங்களின் தலைப்புச் செய்தியை ஆக்கிரமித்துக் கொள்ளும் அளவு சக்திமிக்க நட்சத்திரமாகத் திகழ்பவர் பமீலா.

நிர்வாணம் என்பது தனக்கு ஒரு பெரிய விஷயமே அல்ல என்று கூறும் இவர் 2004-ல் ப்ளேபாய் நிறுவனர் பிறந்த நாளின் போது பிறந்த மேனியுடன் வந்து கேக் ஊட்டி கதிகலங்கடித்தார்.



பல மேடைகளில் அரை நிர்வாண போஸ் கொடுத்து இதயத் துடிப்பை எகிற வைத்த பமீலா, சமீபத்தில் ஒரு பேஷன் நிகழ்ச்சியில் முழு உடைகளையம் நழுவவிட்டு கிட்டத்தட்ட நிர்வாண போஸ் காட்டி அதிர வைத்தார்.

இப்படிச் செய்வது மலிவான பிரபல உத்திதானே என்று பிரிட்டிஷ் நாளிதழ் ஒன்று அவரிடம் கேள்வி எழுப்பியது சமீபத்தில்.

அதற்கு பமீலா பதில் கூறுகையில், "நான் கவர்ச்சியாக இருப்பதைத்தான் விரும்புகிறேன். கவர்ச்சிக்கு உடைகள் பெரும்பாலும் தடையாகத்தான் உள்ளன. எனவே முடிந்த வரை குறைந்த அளவு உடைகள் அணிகிறேன். என் இறுதி மூச்சு உள்ளவரை நிர்வாணத்தையும் கவர்ச்சியையும் விரும்பிக்கொண்டுதான் இருப்பேன்..." என்றார்.

பமீலாவுக்கு திருமணமாகி 13 மற்றும் 11 வயதில் இரு மகன்கள் உள்ளனர். தனது கணவர் டொமி லீயை கடந்த 1998இல் விவாகரத்து செய்தார் பமீலா.



# எண்பதிலும் ஆசை வரும்...

ஐம்பதிலும் ஆசை வரும், ஆசையுடன் பாசம் வரும் என்பார்கள் அது உண்மைதான். அதுவும் 80 வயதில்தான் செக்ஸ் ஆசை அதிகரிக்கும் என்ற தகவலை ஆய்வு ஒன்று தெரிவிக் கிறது.

சிகாகோ பல்கலைக்கழகத்தின் உளவியல் பேராசி ரியர் எட்வர்ட் வியூமான் இது பற்றிய ஆய்வு நடத்தி னார். 57 முதல் 85 வயது வரை உள்ள ஆண், பெண் இருவரிடமும் எந்த வயதில் செக்ஸ் ஆசை அதிக அளவில் இருந்தது என்று கருத்து கேட்கப்பட்டது.

1,550 ஆண்களிடமும் 1,755 பெண்களிடமும் வீடு வீடாகச் சென்று ஆய்வு செய்யப்பட்டது. இவர் களில் 68 சதவீதம் ஆண்களும் 42 சதவீதம் பெண்க ளும் தாங்கள் தற்போதும் 'செக்ஸில் ஈடுபடுவதாகத் தெரிவித்தனர்.

இவர்களில் 80 முதல் 85 வயதுவரை உள்ளவர் கள் தான் அதிக அளவில் 'செக்ஸ்' ஸில் நாட்டம் உள்ளவர்களாக இருப்பது ஆய்வில் உறுதி செய் யப்பட்டுள்ளது. இதற்கிடையே 'செக்ஸ்' உறவு வைத்துக்கொள்ளாதவர்கள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பல பிரச்சினைகளுடன் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் கணவன்-மனைவி உறவும் நெருக்கமாக இல்லாததும் தெரிய வந்தது.

செக்ஸ் உறவு வைத்துக் கொள்பவர்களில் 60 வயதினரைவிட 80 வயதினர் நல்ல உடல் நலத்து டன் உள்ளனர். உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் அதிக ஆரோக்கியத்துடன் உள்ளனர் என்றும் ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கவிளைவை ஏற்படுத்தும் பன்றிக் காய்ச்சல் தடுப்பூசி



நோர்வேயில் 16.5 வீதமான மக்களை பன்றிக் காய்ச்சல் பீடித்தது. அமெரிக்காவில் இதுவரை 3900 பேர் இறந்தனர்.


பறவைக் காய்ச்சல் பயம் போய் இப்போது ஐரோப்பா முழுவதும் பன்றிக் காய்ச்சல் அச்சத்தில் தவித்துக் கொண்டிருக்கிறது. தடுப்பூசி போடும் வேகத்தைவிட அது பரவும் வேகம் அதிகமாகவுள்ளது. அதுபோல தடுப்பூசிகளின் பக்க விளைவுகள் பற்றியும் செய்திகள் வந்தவண்ணமுள்ளன.

பன்றிக் காய்ச்சலுக்குப் போடப்படும் தடுப்பூசி பலத்த பக்க விளைவை ஏற்படுத்துவதாக நோர்வே,சுவீடன் நாடுகளில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த இரண்டு நாடுகளும் டென்மார்க்கிற்கு சில வாரங்கள் முன்னரே தடுப்பூசிகளைப் போட ஆரம்பித்து விட்டதால் பக்கவிளைவுகள் பற்றிய செய்திகளை அறிய இந்த நாடுகளையே அவதானிக்க வேண்டியுள்ளது. நோர்வே பேகன் பகுதியை அண்டிய ஆர்னா நகரில் தடுப்பூசி போட்ட 24 பேர் கடும் பக்க விளைவைச் சந்தித்துள்ளனர். ஊசி போட்ட ஒரு வார காலத்தில் இந்தப் பக்கவிளைவு ஏற்படுவது தெரிகிறது. இதேபோல டென்மார்க்கில் 13 பேருக்கு சிறியளவில் பக்க விளைவு ஏற்பட்டுள்ளது. இதற்காகப் போடப்படும் பண்டபிரிக்ஸ் என்னும் தடுப்பூசியில் உள்ள கிவிக்சுல்வ் என்னும் கலவையே பக்கவிளைவை உண்டு பண்ணுகிறது என்கிறார்கள் வைத்தியர்கள்.

மேலும், நோர்வேயில் பன்றிக் காய்ச்சல் பரவும் வேகம் மிகவும் அதிகமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. வடபுல நோர்வேயுக்குள் பாய்ந்த பன்றிக் காய்ச்சல் இப்போது நோர்வே முழுவதும் தலைவிரித் தாடுகிறது. இதுவரை 6,30,000 பேருக்கு இது தொற்றியுள்ளது. இத்தொகை மொத்த நாட்டின் தொகையில் 16.5 வீதமாகும்.

இதேபோல அமெரிக்காவில் கடந்த ஏப்ரல் முதல் அக்டோபர் வரை பன்றிக் காய்ச்சலால் மடிந்தோர் தொகை 3900 ஆக இருக்கிறது. இதில் 540 குழந்தைகளும் அடங்குவார்கள். இதுவரை அங்கு பன்றிக் காய்ச்சல் 22 மில்லியன் மக்களைத் தாக்கியுள்ளது. இதில் எட்டு மில்லியன் குழந்தைகளாகும். மேலும், 98,000 பேர் வைத்தியசாலையில் உள்ளார்கள். இவர்களில் 36,000 பேர் குழந்தைகளாகும்.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



# சந்திரனில் நிறைய அளவு தண்ணீர் இருக்கிறது

சந்திரனில் நிறைய அளவுக்கு தண்ணீர் இருப்பதாக அமெரிக்காவின் 'நாசா' விண்வெளி ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சந்திரனை பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக இந்தியாவிலிருந்து 'சந்திராயன்–1' செயற்கைக் கோள் அனுப்பி வைக்கப்பட்டது. அது அனுப்பிய தகவல்கள் மூலமாக அங்கு தண்ணீர் இருப்பது தெரியவந்தது. சந்திரனின் மேற்பரப்பு முழுவதும் நீர் இருப்பதற்கான ஆதாரங்கள் உள்ளதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி மைய (இஸ்ரோ) விஞ்ஞானிகள் கடந்த மாதம் தெரிவித்தனர்.

சந்திராயன்–1, செயற்கைக் கோளில் அமெரிக்காவின் 'நாசா' சார்பில் 'சந்திரனின் கனிமவள கண்டுபிடிப்பான்' கருவி ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது. அந்த கருவி அனுப்பிய கதிர் வீச்சின் எதிரொலி மூலமாக 'சந்திரனில் தண்ணீர் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் (ஹைட்ரஜன் மற்றும் ஒக்சிஜன் மூலக்கூறுகள்) இருப்பது தெரியவந்தது.

அமெரிக்க ராக்கெட் மோதல்

இந்த சூழ்நிலையில் சந்திரனை ஆய்வு செய்வதற்காக அமெரிக்காவில் இருந்து 'லெக்ராஸ்' என்ற செயற்கைக்கோள் அனுப்பி வைக்கப்பட்டது. அதில் இணைக்கப்பட்டு இருந்த 'சென்டவுர்' என்ற ராக்கெட்டை சந்திரனின் தென் துருவத்தில் மோதச் செய்தனர். கடந்த அக்டோபர் 9 ஆம் திகதி அன்று இது நடந்தது. அப்போது சந்திரனின் மேற்பரப்பில் 20 முதல் 30 மீற்றர் ஆழத்துக்கு பள்ளம் ஏற்பட்டது.

மேலும் அந்த பள்ளத்தில் இருந்து ஏராளமான பனிக்கட்டிகள் சிதறி வெளியேறின. அவற்றின் அளவு 100 கிலோவுக்கு மேல் இருக்கும். அவற்றை அமெரிக்க விஞ்ஞானிகள் ஆய்வுசெய்தபோது சந்திரனின் மேற்பரப்பில் போதுமான அளவுக்கு தண்ணீர் இருப்பது தெரியவந்தது. இந்த ஆராய்ச்சிக்காக ரூ.395 கோடி இந்திய ரூபா செலவிடப்பட்டது.

'லெக்ராஸ்' திட்டத்தின் இயக்குனர் அந்தோணி கோலபிரட்டி என்ற விஞ்ஞானி கூறியதாவது;

சந்திரனின் தென்துருவம், சந்திரனின் மேற்பரப்பு வரட்சியானது என்றும் அங்கு தண்ணீர் இருக்க வாய்ப்பில்லை என்றும் கோடிக்கணக்கான ஆண்டுகளாக நம்பப்பட்டது. ஆனால் சந்திரனில் நீர் இருப்பதை கண்டுபிடித்து இருக்கிறோம். அதுவும் சிறிதளவு அல்ல. மிகப்பெரிய அளவில் தண்ணீர் இருக்கிறது. ராக்கெட் மோதியதால் ஏற்பட்ட 20 முதல் 30 மீற்றர் ஆழ பள்ளத்தில் இருந்து இரண்டு கலன் தண்ணீர் கிடைத்துள்ளது.

இது ஆரம்பகட்ட முடிவு மட்டுமே. சந்திரனின் தென் துருவத்தில் அருகே நிரந்தரமாக ஒரு கற்றையான அடையாளம் தெரிகிறது. அது தண்ணீராகத்தான் இருக்கும். ராக்கெட் மோதிய இடத்தின் கோடிக்கணக்கான ஆண்டுகளாக சூரிய ஒளி படவில்லை. சந்திரனில் தண்ணீர் இருப்பது மேலும் பல ஆராய்ச்சிக்கு வழி சமைத்துக்கொடுக்கும் என தெரிவித்தார்.



# வண்ணத்துப்பூச்சியின் ரகசிய காதுகள்



மனிதனை ஈர்க்கும் இயற்கை அதிசயங்கள் பல. அவற்றில் வண்ணத்துப்பூச்சிக்கு சிறப்பிடம் உண்டு. பல வண்ணங்களில் சிறகடிக்கும் பட்டாம் பூச்சிகள் பார்ப்பவர்களை பரவசப் படுத்தி விடும்.

அந்த அழகு பட்டாம்பூச்சியைப் பற்றி ஒரு கூடுதல் இரகசியம் இது. வண்ணத்துப் பூச்சிகளுக்கு காதுகள் கிடையாது என்றோ அதன் உறிஞ்சுகுழல் மூலம் உணர்ந்து கொள்ளும் என்றோ நினைத்துக்கொண்டிருந்தால் அது தவறு.

இங்கிலாந்தில் உள்ள பிரிஸ்டோல் பல்கலைக்கழக குழு ஒன்று இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டது. அவர்கள் புளு மார்போ இன வண்ணத்துப்பூச்சிகளில் காதுகள் இருக்கும் ரகசியத்தைக் கண்டுபிடித்தனர். அதன் வண்ணமயமான இறகுகள் உடலோடு இணையும் பகுதியில் இந்தக் காதுகள் அமைந்துள்ளன. இது சிறிய பள்ளி போன்று சற்று மேலெழும்பிய குமிழ் போல காணப்படும். சாயம் போன மஞ்சள் நிறத்தில் இது அமைந்திருக்கும். இந்தப் பகுதியே வண்ணத்துப்பூச்சிகள் ஒலியைக் கேட்கத் துணை புரிகிறது. 1000 முதல் 5 ஆயிரம் ஹேர்ட்ஸ் வரையிலான ஒலியை கேட்கும் தன்மையைப் பெற்றிருக்கின்றன. (மனிதனின் ஒலி உணரும் திறன் 20 முதல் 20 ஆயிரம் ஹேர்ட்ஸ் அளவாகும். நமது பேச்சின் அதிர்வு 100 முதல் 4 ஆயிரம் ஹேர்ட்ஸ் வரை இருக்கும்).

அதிர்வுகளை (வைப்ரேஷன்) காதுகளில் மேற்புற செல்களே அறிந்து கொள்கின்றன. மற்ற ஒலி அலைகளை, உட்புற செல்கள், நரம்புகள் கடத்தும் அதிர்வுகளாக மாற்றி நரம்பு செல்கள் மூலம் அறிந்துகொள்கின்றன.

பறவைகளின் பாட்டுகளை கேட்கவும் தன்னை நெருங்கிவரும் ஆபத்துகளை அறியவும் திசைமாற்றி பறக்க வேண்டிய நேரத்திலும் இந்த உறுப்பை அதிகமாகப் பயன்படுத்துகின்றன.

ஆய்வாளர் ஒருவர் கூறும்போது, '1912 வரை வண்ணத்துப்பூச்சிகளுக்கு காது கேட்காது என்றே நம்பப்பட்டது. அதன்பிறகு சிலவகை பட்டாம்பூச்சிகள் ஒலி அதிர்வை அறிந்துகொள்வது கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது நாங்கள் புளு மார்போ இன வண்ணத்துப்பூச்சிகளின் ஒலி உணர் உறுப்பை (காது) கண்டுபிடித்து விளக்கி உள்ளோம்' என்றார்.

அடுத்து உங்கள் கைகளில் வண்ணத்துப்பூச்சி சிக்கினால் ரசியங்கள் அதன் காதைத் தேடாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பாலூட்டுவதால் குறைவது அழகல்ல, உயிராபத்தே

நவீன உலகில் அன்பு, பாசம் என்பன எல்லாம் அருகிப் போகின்ற போக்கில் உள்ளது போலவே தாய்மை உயர்வும் அப்படியே சென்று கொண்டு போவதைக் காணமுடிகிறது.

இவற்றில் ஒன்றுதான் தாய்-சேய் இணைப்பு என்பது. தற்போது பாலூட்டுவதைப் பெரும் பாலும் தவிர்த்துக்கொள்ளும் மனப்பான்மை வலுவடைந்து செல்கின்றது. எனினும், இதற்கு முரணாகவே நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் ஆய்வுக் கற்கைகளும் நகர்கின்றன. பல ஆய்வுக் கற்கைகளின் மூலம் பெறப்பட்ட முடிவுகளே இங்கு தரப்படுகின்றன.



தாய்ப்பால் ஊட்டுவதன் மூலம் ஒரு குழந்தை மிக அதிகளவு பயன்களைப் பெறுகின்றது. இதேவேளையில் தாய்ப்பால் ஊட்டுவதால் குழந்தைக்கு ஏற்படும் பயன்கள் பற்றி அறிந்து தாய்மார்கள் கூட தமது உடல் அழகைக் கருத்திற்கொண்டு அதைத் தவிர்ப்பதைக் காணமுடிகின்றது.

தாய்ப்பால் ஊட்டுவது என்பது நினைக்குமளவிற்கு எந்தவொரு தாயினது உடல் அழகையும் குறைக்கும் என்றில்லை. உடலில் தேவைக்கு அதிகமாக வேண்டாத பாகங்களில் கொழுப்பு தேங்குவதைக் குறைக்கும். அதாவது நாரிப் பகுதி, வயிற்றுப் பகுதிகளில் சேரும் கொழுப்பின் அளவைக் குறைக்க இது பெரிதும் உதவும். இங்கு உடலின் ஓமோன் சமநிலை ஒன்றும் உருவாக்கப்படுகிறது. இவற்றினால் மேலும் பல நன்மைகளைத் தாய் பெறமுடிகின்றது.

பாலூட்டல் என்பது வெறுமனே புட்டிப்பாலைக் குழந்தை உறிஞ்சுவதன் மூலம் அதை அருந்திக்கொள்வது போன்றதொரு தொழிற்பாடு அல்ல. பால் சுரக்கப்படுவது தொடக்கம் வெளியேற்றப்படுவது வரை சுரப்பிகள் பலவற்றின் ஒருங்கிணைப்பும் ஓமோன்கள் பலவற்றின் பங்களிப்பும் நடைபெறுகின்றது.

இது அங்கங்கள் அதாவது மூளையின் பல பகுதிகள் சுரப்பிகள் என்பவற்றுடன் தொடர்பாக தகவல் பரிமாற்றங்களுடன் நடைபெறும் ஒரு பொறிமுறையாகவே உள்ளது.

இவ் உடல் அழகு என்னும் விடயத்தை பலபடிகள் தாண்டி மார்புப் புற்றுநோய்க்கான ஆபத்தை மிக உயர் அளவில் குறைக்கின்றது.

நாட்டுக்கு நாடு, மனித இனத்திற்கு இனம், பாலூட்டும் தன்மை, கால அளவு என்பன வேறுபட்டுக் கொண்டே போகின்றது. இது அந்நாட்டின் கலாசாரத்தைத் தழுவியதாகவே காணப்படுகின்றது.

பாலூட்டலால் உடலில் ஓமோன் சமநிலை ஏற்படுவதுடன் ஈஸ்திரோஜன் என்னும் ஓமோனின் அளவு குறைவடையும்போது மார்புப் புற்றுநோய்க்கான ஆபத்து குறைவடைகின்றது.

இவற்றுடன் குலகத்தின் சூழ்கொள்ளல் தவிர்க்கப்படுகிறது. இவற்றினால் புற்றுநோய்க்கான சாத்தியக்கூறு மேலும் வலுவாகக் குறைகின்றது.

இவற்றைவிட பாலூட்டும்போது வெளியேறும் பாலில் கொழுப்புத் தன்மை இருப்பதால் தாயின் உடலில் சிலவகையான கொழுப்புக்கள் குறைகின்றன. இதனால் புற்றுநோய்க்கான உருவாக்கிகள் Adipose tissue இல் தங்குவதற்கான வாய்ப்புக்கள் அரிதாக்கப்படுகிறது.

மேலும் பாலூட்டுவதன் மூலம் மார்பின் பாற்கான்களின் அகவணியில் காணப்படும் கலங்கள் விகாரமடையும் தன்மை குறைக்கப்படும். இதனால் புற்றுநோய்க்கான விகாரங்கள் உருவாதல் தவிர்க்கப்படுகின்றது.

பொதுவாகப் பாலூட்டுவதனால் மாதவிடாய் நிறுத்தத்திற்கு முன்னான வயது காலப்பகுதியில் பெண்களில் ஏற்படக் கூடிய சிலவகையான புற்றுநோய்க்கான வாய்புக்கள் குறைகின்றன.

தாய்ப்பாலூட்டலினால் குழந்தை பெறும் நன்மைகள் பலவுண்டு. எனினும், இவற்றையெல்லாம் விஞ்சியதாகக் குழந்தை எதிர்காலத்தில் வளரும் காலங்களில் மார்புப் புற்றுநோயின் தாக்கத்திற்கு ஆளாவது குறைக்கப்படுகிறது.

தொற்றுநோய், சுவாச நோய் மற்றும் பல நோய் நிலைகளின் தாக்கமும் வலுக்குன்றியதாகவே காணப்படும்.

மேலும் பாலூட்டலினால் மகப்பேற்றின் பின்னரான காலங்களில் ஏற்படும் குருதியிழப்பு குறைகின்றது. அத்தோடு தாயானவள் தனது மகப்பேற்று காலத்தின் முன்னான கால உடற் பருமனை விரைவில் அடையவும் முடிவதுடன் என்பு வன்மையடைவதற்கான கல்சியம் மீள் உருவாததற்கான பொறிமுறையை மேலும் துரிதப்படுத்துவதால் முதிர்வின் போது ஏற்படும் என்பு முறிவு நோய் (Physiological Fracture) இல் இருந்தும் பாதுகாக்கப்படும்.

தாய்ப்பாலூட்டல் என்பது சமூகத்தில் அண்டி பாசத்தை கட்டியெழுப்புவதுடன் உடலை கட்டழகாகப் பேணவும் நோய் நிலைகளில் இருந்து தப்பிக் கொள்ளவும் உகந்த வழிமுறையாகும்.

**டாக்டர் வெ.நாகநாதன்**
**யாழ்.போதனா வைத்தியசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் மனநிலை

கடந்த மூன்று தசாப்தங்களாக நாட்டைப் பீடித்திருந்த யுத்தத்தினால் பாதிக்கப்படாதவர்கள் எவருமேயில்லை. கைக் குழந்தை முதல் வயோதிபர் வரை கோர விளைவுகளை அனுபவித்து வருகின்றனர்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தான் வவுனியா நலன்புரி முகாம்களிலுள்ள ஆயிரத்திற்கும் அதிகமான சிறுவர்கள் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் நடைப் பிணங்களாக காணப்படுகின்றனர்.

குடும்பங்களை, கல்வியறிவை,இல்லங்களை இழந்து, பசி, பட்டினியால் வாடும் சிறுவர்களின் வெவ்வேறு விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டிருந்தும் இவர்களின் மனநிலை தொடர்பாக பேசுவதற்கு எவருமே முன்வருவதில்லை.

முகாம்களிலுள்ள சிறுவர்களின் உளநல மேம்பாடு தொடர்பில் பல வேலைத்திட்டங்களை மேற்கொண்ட விசேட உளவளத் துறை நிபுணரும், ஆசிரிய ஆலோசகருமான ஒருவர் தனது வேலைத்திட்டங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்;

'அரசாங்கத்தின் உதவியுடன், யுனிசெப் நிறுவனத்தினால் கடந்த 3 மாதங்களுக்கு முன் வவுனியா முகாம்களிலுள்ள சிறுவர்களின் மனோநிலை தொடர்பாக 60 இற்கும் மேற்பட்ட உளவியல் துறை ஆசிரிய ஆலோசகர்களை அழைத்துச் சென்றனர். அந்த வகையில், ஒரு முகாமிற்கு 12 ஆசிரிய ஆலோசகர் என்றடிப்படையில், அங்குள்ள முகாம்களுக்கு பகிரப்பட்டனர்.

அந்தவகையில் நான் இராமநாதன் முகாமிற்கு அனுப்பப்பட்டேன். இந்த முகாமிலுள்ள சிறுவர்களில் அதிகமானவர்கள் அதிர்ச்சிக்குள்ளாகி, மனநிலை பாதிக்கப்பட்ட நிலையிலே காணப்பட்டனர். இருந்தும் இவர்கள் கல்வி கற்பதில் அதிக ஆர்வம் காட்டினர்.

இங்கிருந்த ஒருசில சிறுவர்கள் தாங்கள் எங்கு இருக்கிறோம், பெற்றோர் எங்கே? என்ன நடந்துள்ளது? என்ற விபரங்களைத் தெரிந்தவர்களாக இல்லை. சோர்வுடையவர்களாகவும், துக்க நிலையிலும், எந்நேரமும் ஒதுங்கியே இருக்கின்றனர்.

இவர்களின் மனநிலையை மாற்றியமைக்க ஒரே வழி கல்வி புகட்டல் என்று கூறமுடியாது. இதன்மூலம் இச் சிறுவர்களது மனச்சுமைகளை வெளிக்கொணர முடியாது. எனவே நாம் இவர்களுக்காக இசைக்கருவிகள் உபயோகம், உடற்பயிற்சிகள், விளையாட்டுகள் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுத்தினோம். இதனால், இச் சிறுவர்கள் ஆர்வத்துடன் வந்து விளையாடியதுடன், சுயமாகவே தமது நிலைமையை எங்களிடம் கூறும் ஒரு நெருங்கிய உறவுமுறைக்கு ஆளாக்கப்பட்டோம்' என்றார்.

மேலும் ஒவ்வொரு முகாமிற்கும் இரு பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், அதிபர், 16 ஆசிரியர்கள், இரண்டு ஆசிரிய ஆலோசகர்களைக் கொண்டு இயங்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

'வயது வந்தவர்களின் செயற்பாடுகள் வளர்ந்தும் பெரியவரான போதில் நினைவற்றுப் போயினும், சிறுவயது செயற்பாடுகளே பின்னாளைய ஆளுமைக்கு காரணமாக அமைகின்றன' என உளப்பகுப்பாளர் சிக்மன் பிரைட்டின் கூற்று. இன்றைய உலகில், யுத்தக் கொடுமைக துக்கநிலையில் வாழும் சிறுவர்களின் மனநிலைக்கு ஏதுவாக அமைந்துள்ளது.



தாயின் அரவணைப்பில் வீட்டிற்குள், வளர்ந்து சக சிறுவர்களுடன் கூடி பறக்கத் துடிக்கும் பருவத்தில் முகாம்களில் அடைக்கப்பட்டு பெற்றோர், உறவினர் அரவணைப்பின்றி, சுதந்திரமாக செயற்பட முடியாமல் உளரீதியான பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த நிலையிலேயே இச் சிறுவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

குருவிக் கூடுகளில் இறக்கை முளைக்காத குஞ்சுகள் பறக்க முயன்று, கீழே வீழ்வதும் பின்னர் பெற்றோர்களினால் கூட்டில் இடப்படுவதும்...., இவ்வாறான முயற்சியின் பின் ஒருநாள், வெற்றிகரமாக தன் பெற்றோர்களுடன் கூடிப்பறப்பதுமே சிறுவர் பராயத்தின் நிலைமையென அறியாதவர்களாக இன்று உடல், உள மாற்றங்களோடே வாழ்வை கழிக்கின்றனர்.

அரசின் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு மத்தியிலும், யுத்த நிலையிலிருந்து சிறுவர்களின் மனோநிலை மாறவில்லையென உளவளத்துறை ஆலோசகர்கள் தெரிவிக்கின்றனர்.

எதிர்காலத்தின் கண்களாக மிளிரக் கூடிய இச் சிறுவர் பராயத்தினரின் மனநிலையை மேம்படுத்தவும் அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்வதே சாலச் சிறந்தது.

எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கையால் அடித்த கால்பந்து




ரஷ்ய கால்பந்து அணிக்கு மிகப் பெரும் அதிர்ச்சி. 2010 இல் நடக்கவுள்ள உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெறும் வாய்ப்பை பரிதாபமாக இழந்தது.

தென்னாபிரிக்காவில் 2010 (ஜூன் 11-ஜூலை 11) 19 ஆவது உலகக் கிண்ணக் கால்பந்து தொடர் நடக்கவுள்ளது. இதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் 2007 இல் தொடங்கியது. மொத்தம் உள்ள 32 இடங்களுக்கு உலகின் 204 அணிகள் பல்வேறு பிரிவுகளில் மோதின.

**ஸ்லோவேனியா அபாரம்:**

ஸ்லோவேனியாவில் மரிபரிலில் நடந்த தகுதிச் சுற்றுப் போட்டியில் ரஷ்ய அணி, கத்துக்குட்டி ஸ்லோவேனியாவை சந்தித்தது. இப்போட்டியில் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் ரஷ்யா களமிறங்கியது. 2002 இல் தென்கொரிய அணியை உலகக் கிண்ண அரையிறுதிக்கு அழைத்துச் சென்ற கஸ் ஹடின்க், இம்முறை ரஷ்யாவின் பயிற்சியாளராக இருந்தார். இதனால் எளிதில் வெற்றி பெறுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 44 ஆவது நிமிடத்தில் ஸ்லோவேனிய வீரர் ஸ்லாட்கோ டெடிக், ஒரு சுப்ப கோல் அடித்து அணிக்கு முன்னிலை பெற்றுக் கொடுத்தார்.



இதற்கு ரஷ்யாவால் பதிலடி கொடுக்க முடியவில்லை. இறுதியில் ஸ்லோவேனிய அணி 1-0 என வெற்றி பெற்று உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னேறியது.

கால்பந்து தரப் பட்டியலில் தற்போது 12 ஆவது இடத்திலுள்ள ரஷ்யா, 1994,2002 இல் உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றது. 2006 இல் தகுதி பெறாத இந்த அணி, மீண்டும் இம்முறை ஏமாற்றமளித்துள்ளது.

**சர்ச்சைக்குரிய கோல்:**

இதேநேரம் கடைசி தகுதி சுற்றுப் போட்டிகள் வியாழன் இரவுடன் நிறைவு பெற்றன. தனது கடைசி ஆட்டத்தில் முன்னாள் சாம்பியனான பிரான்ஸ் அணி, அயர்லாந்தை எதிர்கொண்டது. சில தினங்களுக்கு முன்பு அயர்லாந்தில் நடந்த போட்டியில் பிரான்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் அயர்லாந்தை வென்றிருந்தது.

எனவே இந்தப் போட்டியில் 2 கோல் வித்தியாசத்தில் அயர்லாந்து அணி வெற்றி பெற்றால் உலகக் கிண்ணப் போட்டிக்கு தகுதி பெறலாம். மாறாக பிரான்ஸ் அணி 'டிரா' செய்தாலே தகுதி பெற்றுவிட முடியுமென்ற நிலையிருந்தது.

தொடக்கம் முதலே ஆட்டத்தில் அனல் பறந்தது. அயர்லாந்து கப்டன் ராபி வறீன் 33 ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். பிரான்ஸால் பதில் கோல் அடிக்க முடியவில்லை. ஆட்ட நேரம் முடிவில் அயர்லாந்து அணி 1-0 என்ற கோல் கணக்கிலிருந்தது.

முந்தைய ஆட்டத்தில் பிரான்ஸ் அணி ஒரு கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்ததால் 1-1 என்ற சமநிலை ஏற்பட்டது. இதனால் வெற்றி தோல்வியை நிர்ணயிக்க கூடுதல் நேரம் கொடுக்கப்பட்டது. இதில் 13 ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் அணிக்கு 'பிரீ-கிக்' வாய்ப்பு கிடைத்தது. இதனை பயன்படுத்தி கப்டன் ஹென்ரி பந்தை 'பாஸ்' செய்தார். அப்போது பந்து அவரது கையில் பட்டுச் சென்றது. இதனைப் பெற்ற வில்லியம்ஸ் கால்லாஸ் ஒரு கோல் அடிக்க (103 ஆவது நிமிடம்), போட்டி 1-1 என 'டிராவில்' முடிந்தது.

இதையடுத்து ஒட்டுமொத்த கோல் அடிப்படையில் பிரான்ஸ் அணி உலகக் கிண்ணப் போட்டிக்கு தகுதி பெற்றது. எனினும் வில்லியம்ஸ் கல்லாஸ் அடித்த இந்த கோல் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த கோலை அடிக்கும் முன்பு கோல் எல்லையின் அருகில் நின்ற பிரான்ஸ் அணிக்கப்டன் தியரி ஹென்ரி எதிர்பாராத விதமாக பந்தை கையால் தடுத்தபடி கடத்தி (பாஸ் செய்து) வந்து கொடுத்தார். பந்து கையில் பட்டதை நடுவர் மார்ட்டின் ஹன்சன் (சுவீடன்) கவனிக்கத் தவறிவிட்டார். இதனால் பிரான்ஸ் அடித்த இந்த முக்கியமான கோல் பெருத்த சர்ச்சையை கிளப்பியது. அயர்லாந்து இரசிகர்கள் மோசடி செய்துவிட்டதாகக் கூச்சலிட்டனர்.

## புதிய சர்ச்சை உருவானது

**அயர்லாந்து எதிர்ப்பு:**

கால்பந்து விதிமுறைப்படி பந்து கையில் படக்கூடாது. அப்படியிருக்க பிரான்ஸ் அடித்த கோலை நிராகரிக்க வேண்டுமென அயர்லாந்து வீரர்கள் வாதாடினர். இதனை ஏற்க சுவீடன் நடுவர் மார்ட்டின் ஹன்சன் மறுத்துவிட்டார். தவறு செய்த ஹென்ரிக்கு தடை விதிக்க வேண்டுமெனவும் கோரிக்கை எழுந்துள்ளது.

**இது குறித்து காலாஸ் கூறுகையில்;**

'ஹென்ரியிடமிருந்து படு வேகமாகப் பந்து வந்தது. இதனால் பந்து அவரது கையில் பட்டதா என்பதை கவனிக்க முடியவில்லை' என்றார்.

**மரடோனாவுக்குப் பின்:**

1986 இல் நடந்த உலகக் கிண்ண காலிறுதியில் இங்கிலாந்துக்கு எதிராக ஆர்ஜென்ரீனாவின் மரடோனா தனது கையால் பந்தைத் தட்டி கோல் அடித்தார். பின்னர் இதனை 'கடவுளின் கை' என்று மரடோனா குறிப்பிட்டார். இத்தொடரில் ஆர்ஜென்ரீனா வென்றது. இதற்குப் பின் ஹென்ரி பந்தை கையால் தொட்டு கோல் அடிக்க உதவியது பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.



## மோதும் 32 அணிகள்

உலகக் கிண்ணத் தகுதிச் சுற்றுப் போட்டிகள் முடிவடைந்து விட்டன. இத்தொடருக்கு தகுதி பெற்றுள்ள 32 அணிகள்

ஆசியா;

அவுஸ்திரேலியா,ஜப்பான்,தென்கொரியா,வடகொரியா

ஆபிரிக்கா;

அல்ஜீரியா,ஐவரி கோஸ்ட்,நைஜீரியா,கமரூன்,கானா, ✱தென்னாபிரிக்கா

ஐரோப்பா;

டென்மார்க்,பிரான்ஸ்,கிரீஸ்,நெதர்லாந்து,செர்பியா, ஸ்லோவேனியா,சுவிற்ஸர்லாந்து,இங்கிலாந்து,ஜேர்மனி,இத்தாலி,போர்த்துக்கல்,ஸ்லோவேகியா,ஸ்பெயின்

வட, மத்திய அமெரிக்கா மற்றும் கரிபியன்;

ஹொண்டுராஸ்,அமெரிக்கா,மெக்ஸிக்கோ

ஓசியானியா;

நியூஸிலாந்து

தென்அமரிக்கா;

ஆர்ஜென்ரீனா,சிலி,உருகுவே,பிரேஸில்,பராகுவே

✱போட்டியை நடத்தும் நாடு என்ற அடிப்படையில் தென்னாபிரிக்க அணி நேரடியாகத் தகுதி பெற்றது.




## போட்டியை மீண்டும் நடத்துக

சர்ச்சைக்குரிய கோலால் பிரான்ஸுடனான போட்டியை மீண்டும் நடத்த வேண்டுமென்று அயர்லாந்து வலியுறுத்தியுள்ளது.

பாரிஸ் நகரில் பிரான்ஸ்-அயர்லாந்து அணிகள் மோதிய தகுதிச் சுற்று சர்ச்சையில் முடிந்தது. பிரான்ஸ் வீரர் வில்லியம்ஸ் காலாஸ் அடித்த கோலால் சர்ச்சை ஏற்பட்டது. அணிக் கப்டன் ஹென்ரி கையால் பந்து பட்டுச்சென்றதைத்தான் வில்லியம்ஸ் கோல் அடித்தார். இதை நடுவர் கவனிக்கத் தவறிவிட்டார்.

ஹென்றி மோசடி செய்து விட்டதாக அயர்லாந்து இரசிகர்கள் கூச்சலிட்டனர். பந்து கையில் பட்டதை ஹென்ரியும் ஒப்புக்கொண்டார். ஆனால், நான் நடுவர் இல்லையென்று அவர் கூறியிருக்கிறார்.

சர்ச்சைக்குரிய இந்தப் போட்டியின் முடிவால் அயர்லாந்து வாய்ப்பையிழந்தது. இதனால் இந்தப் போட்டியை மீண்டும் நடத்த வேண்டுமென்று அயர்லாந்து வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக அயர்லாந்து நிதி அமைச்சர் டெர்பனட் கூறும் போது, நாங்கள் வெற்றிபெற வேண்டிய போட்டி 'டிரா' ஆனது. எங்களை ஏமாற்றிவிட்டனர் என்றார்.

இந்தப் போட்டியை மீண்டும் நடத்தக் கோரி அயர்லாந்து கால்பந்து சங்கம் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தை வலியுறுத்தியுள்ளது. அயர்லாந்தின் வேண்டுகோள் கடிதம் வந்துள்ளதாக சர்வதேச கால்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து தற்போது எந்த முடிவும் சொல்ல இயலாது என்று அமைப்பின் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே பொருத்தம் இருக்கிறது?



ஒருநாள் போட்டியில் இந்திய அணிக் கப்டன் தோனி எந்தவரிசையில் களமிறங்குவது என்ற குழப்பம் நீடிக்கிறது. இவர் முன்வரிசையில் களமிறங்க வேண்டுமென கங்குலி உள்ளிட்ட முன்னாள் வீரர்கள் தெரிவித்தனர். ஆனால், தோனி தொடர்ந்து 5 ஆவது வீரராகவே களமிறங்குகிறார். துடுப்பாட்ட வரிசையில் இவருக்குப் பொருத்தமான இடம் எது என்று பார்ப்போம்.

**மூன்றாவது வீரராக:**

2004 ஆம் ஆண்டு மேற்கிந்திய அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் அறிமுகமான கப்டன் தோனி இதுவரை 151 ஒருநாள் போட்டியில் விளையாடி 5 சதம்,33 அரைச் சதம் உட்பட 4954 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இவர் முந்தைய நாட்களில் மூன்றாவது அல்லது நான்காவது வீரராக களமிறங்கினார். அப்போதுதான் பாகிஸ்தான் அணிக்கு எதிராக விசாகபட்டினத்தில் நடந்த போட்டியில் 148 ஓட்டங்கள் எடுத்தார்.

இலங்கை அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் 183 ஓட்டங்கள் எடுத்து தனது அதிகபட்ச ஓட்டத்தைப் பதிவு செய்தார். இவர் மூன்றாவது அல்லது நான்காவது வீரராகக் களமிறங்கிய போது சிறப்பாகச் செயல்பட்டதால்தான், முன்வரிசையில் வர வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

**ஐந்தாவது வீரராக:**

இருப்பினும் தோனி அதிக போட்டியில் ஐந்தாவது அல்லது ஆறாவது வீரராகக் களமிறங்கியுள்ளார். இவர் இதுவரை 27 போட்டியில் ஐந்தாவது வீரராகக் களமிறங்கி 1065 ஓட்டங்கள் எடுத்துள்ளார். ஆறர்வது வீரராக 47 போட்டியில் களமிறங்கி 1395 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இவர் சமீபத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நாக்பூரில் நடந்த ஒருநாள் போட்டியில் ஐந்தாவது வீரராகக் களமிறங்கினார். இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி 124 ஓட்டங்கள் எடுத்து 12 ஆவது முறையாக ஆட்டநாயகன் விருதை வென்றார். இதன் மூலம் ஐந்தாவது வீரராக துடுப்பெடுத்தாடி முதன் முதலில் ஆட்டநாயகன் விருதை வென்றார்.

**ராசியான 'நம்பர் -5':**

சர்வதேச அளவில் இங்கிலாந்தின் பிளின்டாப், கொலிங்வூட், அவுஸ்திரேலியாவின் சைமண்ட்ஸ், இந்தியாவின் யுவராஜ்சிங், டிராவிட், தென்னாபிரிக்காவின் ஜோன்டி ரொட்ஸ், குரோஞ்ஞே, பாகிஸ்தானின் இன்ஸமாம், மேற்கிந்தியாவின் சந்தர்போல் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் ஐந்தாவது வீரராக களமிறங்கி 1000 ஓட்டங்களுக்கு மேல் எடுத்து அசத்தியுள்ளனர்.

தோனியின் வாழ்க்கையில் 7 ஆம் நம்பர் தான் ராசியானது. அவர் 7 ஆம் திகதியில் பிறந்தவர். ஆனால், கிரிக்கெட்டில் இவருக்கு 5 ஆம் இடம்தான் ராசியானதாக உள்ளது. இதனால்தான் ஐந்தாவது வீரராகவே களமிறங்குகிறார்.

**தோனியின் துடுப்பாட்ட அவதாரம்:**

| வரிசை | போட்டி | ஓட்டம் | சராசரி | சதம்/அரைச்சதம் |
|---|---|---|---|---|
| 'நம்பர்-3' | 15 | 921 | 83.72 | 2/5 |
| 'நம்பர்-4' | 12 | 708 | 88.50 | 1/8 |
| 'நம்பர்-5' | 27 | 1065 | 50.71 | 1/5 |
| 'நம்பர்-6' | 47 | 1395 | 38.75 | 0/9 |
| 'நம்பர்-7' | 24 | 589 | 39.26 | 1/4 |

**'நம்பர்-5' சாதனையாளர்கள்:**

| வீரர் | போட்டி | ஓட்டம் | சராசரி | சதம்/அரைச்சதம் |
|---|---|---|---|---|
| தோனி (இந்.) | 27 | 1065 | 50.71 | 1/5 |
| பிளின்டாப் (இங்கி.) | 48 | 1749 | 46.02 | 3/11 |
| சைமண்ட்ஸ் (ஆஸி.) | 96 | 3473 | 44.52 | 5/23 |
| யுவராஜ் (இந்.) | 81 | 2878 | 42.32 | 7/16 |
| கொலிங்வூட் (இங்கி.) | 73 | 2535 | 40.80 | 2/19 |
| குரோஞ்ஞே (தென்.ஆ.) | 43 | 1451 | 40.30 | 0/11 |
| டிராவிட் (இந்.) | 69 | 2459 | 43.91 | 2/22 |
| இன்ஸமாம் (பாக்.) | 105 | 3473 | 41.84 | 0/27 |
| சந்தர்போல் (மேற்.இ.) | 61 | 1996 | 43.59 | 0/15 |




# சச்சின்: சில சுவாரஸ்யமான தகவல்கள்

**டெஸ்ட் கிரிக்கெட்டில்...**

டெஸ்ட் சர்வதேச ஒருநாள் மற்றும் டுவென்ரி-20 போட்டிகளில் 30 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்துள்ள சச்சின் டெண்டுல்கர் பற்றிய சில சுவாரஸ்யமான தகவல்கள்

★ 1989 ஆம் ஆண்டு டெஸ்டில் அறிமுகமாகும் போது டெண்டுல்கரின் வயது 16 ஆண்டு 205 நாள். அப்போது இளம் வயதிலேயே டெஸ்டில் பங்கேற்ற 3 ஆவது வீரர் என்ற சிறப்பைப் பெற்றிருந்தார்.

★ 159 டெஸ்ட் விளையாடி 12,773 ஓட்டங்கள் (சராசரி 54.58) குவித்துள்ளார். வேறு எந்த வீரரும் டெஸ்டில் 12 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்ததில்லை. டெஸ்டில் அதிக சதமடித்தவர் (42 சதம்) என்ற சிறப்பையும் தக்க வைத்துக்கொண்டுள்ளார். டெஸ்ட் விளையாடும் எல்லா அணிகளுக்கு எதிராகவும் சதமடித்திருக்கிறார்.

★ அதிக டெஸ்டில் விளையாடியவர் அவுஸ்திரேலிய முன்னாள் கப்டன் ஸ்ரீவோ. அவர் 168 டெஸ்டில் பங்கேற்றுள்ளார். இந்தச் சாதனையை முறியடிக்க டெண்டுல்கர் இன்னும் 10 டெஸ்டில் ஆட வேண்டும். அடுத்த ஆண்டோ அல்லது 2011 ஆம் ஆண்டிலேயோ இந்தச் சாதனையை டெண்டுல்கர் முறியடிக்கக்கூடும்.

★ டெஸ்டில் ஓராண்டில் அவர் ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்தது 5 முறை நடந்திருக்கிறது. 1997 ஆம் ஆண்டில் ஆயிரம் ஓட்டங்களும் 1999 ஆம் ஆண்டில் 1088 ஓட்டங்களும் 2001 ஆம் ஆண்டில் 1003 ஓட்டங்களும் 2002 ஆம் ஆண்டில் 1392 ஓட்டங்களும் 2008 ஆம் ஆண்டில் 1063 ஓட்டங்களும் எடுத்திருக்கிறார். டெண்டுல்கர், ஹைடன், பொண்டிங்,லாரா ஆகியோர் மட்டுமே 5 சீசனில் தலா ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் கடந்தவர்கள்.

★ டெண்டுல்கர் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி குஜ்ரன்வாலாவில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தின் மூலம் முதன் முதலாக ஒருநாள் போட்டியில் ஆடினார். 2 பந்தை மட்டுமே எதிர்கொண்ட இந்த ஆட்டத்தில் அவர் வக்கார் யூனிஸ் பந்தில் 'டக் அவுட்' ஆனார்.



★ இதுவரை 436 ஒருநாள் போட்டியில் விளையாடி 17,178 ஓட்டங்கள் (சராசரி 44.50) குவித்து எந்தவீரரும் நெருங்க முடியாத உச்சியிலிருக்கிறார்.

★ 45 சதங்களைப் பதிவு செய்து இதிலும் சாதனை மன்னனாகத் திகழ்கிறார். இத்தனைக்கும் தனது 79 ஆவது ஒருநாள் போட்டியில் தான் தனது முதலாவது சதத்தை எடுத்தார்.

★ அதிகமான மைதானங்களில் விளையாடிய வீரரும் இவரே. உலகம் முழுவதும் 90 ஸ்டேடியத்தில் கால் பதித்துள்ளார்.

★ ஒருநாள் போட்டியில் தனிநபர் அதிகபட்ச ஓட்டங்களைப் பெற்ற இந்திய வீரர் என்ற பெருமையும் உண்டு. 1999 ஆம் ஆண்டு ஹைதராபாத்தில் நடந்த நியூஸிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் 186 ஓட்டங்கள் குவித்திருக்கிறார்.

★ அதிக முறை ஆட்டநாயகன் விருது பெற்றிருக்கிறார் 60 முறை.

★ அதிக தடவை தொடர்நாயகன் விருது கிடைத்ததும் இவருக்கே 15 முறை.

★ ஒருநாள் போட்டியில் ஒரு ஆண்டில் அதிக ஓட்டங்கள் குவித்த சாதனையும் டெண்டுல்கர் வசமே உள்ளது. 1998 ஆம் ஆண்டில் 1,894 ஓட்டங்கள் எடுத்திருக்கிறார். அதே ஆண்டில் 9 சதமடித்ததும் ஒரு மைல்கல்லாகும்.

★ இதுவரை 5 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்று 4 சதம், 13 அரைச்சதம் உட்பட அதிகபட்சமாக 1,796 ஓட்டங்கள் எடுத்திருக்கும் சச்சின், 2011 ஆம் ஆண்டு சொந்த மண்ணில் நடக்கும் உலகக் கிண்ணத்தை ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கிறார்.

★ சர்வதேச கிரிக்கெட்டில் 90-99 ஓட்டங்களுக்குள் அதிக முறை ஆட்டமிழந்ததும் இவரே. மொத்தம் 24 தடவை (17 ஒருநாள் போட்டி மற்றும் 7 டெஸ்ட்) இவ்வாறு 90 ஓட்டங்களுக்குள் வெளியேறியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுசாதனப் பொருட்களின் உற்பத்திக்கு மனிதக் கொழுப்பை விற்றுவந்த கும்பல் கைது

**லிமா:** பெருவில் மனிதர்களைக் கடத்தி கொலை செய்து அவர்களின் கொழுப்பு மற்றும் திசுக்களை (சவ்வு) விற்பனை செய்துவந்த கும்பலின் சில உறுப்பினர்களை அந்நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அழகுசாதனப் பொருட்கள் தயாரிப்பதற்காக இவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு இவற்றை விற்பனை செய்து வந்ததாக் கூறும் பொலிஸார் ஒரு லீற்றர் மனிதக் கொழுப்பு 15 ஆயிரம் டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

தலைநகர் லிமாவில் பொலிஸ் காவல் துறையினர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இந்தத் தகவலை வெளியிட்ட பொலிஸார் மனிதக் கொழுப்பு மற்றும் திசுக்களால் நிரப்பப்பட்ட போத்தல்களை செய்தியாளர்களுக்கு காண்பித்துள்ளனர்.

சனநடமாட்டம் குறைந்த வீதிகளில் வரும் ஆட்களைக் கடத்திக் கொலை செய்து மனிதக் கொழுப்பு மற்றும் திசுக்களை விற்பனை செய்து வந்தமை கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தோடு தொடர்புடைய இரு இந்தியர்கள் உட்பட ஏனையவர்களைத் தேடி வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இப்பிராந்தியத்தில் காணாமல் போயுள்ள சுமார் 60 பேர் வரையில் இக்கும்பலினால் கடத்தப்பட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மனிதர்களைக் கொலை செய்து அவர்களின் உடலிலிருந்து எவ்வாறு கொழுப்புகளைப் பிரித்தெடுத்து விற்பனை செய்வது என்பது தொடர்பில் கைதானவர்கள் சில விளக்கங்களை அளித்துள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இக்கொழுப்புகள் அழகு சாதன மற்றும் மருந்தாக்கல் கம்பனிகளுக்கு விற்பனை செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்ற போதிலும் இவர்களுடன் தொடர்பு வைத்திருந்த கம்பனிகள் தொடர்பான விபரங்கள் உறுதிப்படுத்தப்படவில்லை.

இவ்விற்பனையில் பெருவிலிருந்து செயற்படும் சர்வதேச வலைப்பின்னலொன்று ஈடுபட்டிருப்பதாகவும் சந்தேகிக்கப்படுகின்றது.

இதேவேளை, இக்கொழுப்பை கொள்வனவு செய்யும் நபர்களைத் தேடும் நடவடிக்கைகளையும் பொலிஸார் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. **பி.பி.சி.**

## சர்வதேச வலம்

— ச.துஷ்யந்தினி

# கனவில் கணவன் போட்ட சண்டையால் நிஜத்தில் பறிபோன மனைவியின் உயிர்



**லண்டன்:** சிறு வயதிலிருந்தே தூக்கத்தில் நடக்கும் பழக்கத்தைக் கொண்ட நபரொருவர் தூக்கத்தின் போது தனது மனைவியை கொலை செய்த சம்பவம் குறித்த வழக்கொன்று பிரிட்டனில் விசாரணைக்கு வந்துள்ளது.

வேல்ஸின் மேற்குப் பகுதியில் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்த பிரையன் தோமஸ் (வயது- 59) நள்ளிரவில் பயங்கரக் கனவொன்றைக் கண்டுகொண்டிருந்த சமயம் அருகில் உறங்கிக் கொண்டிருந்த மனைவி கிறிஸ்டினின் (வயது- 57) கழுத்தை நெரித்துக் கொலை செய்ததை ஏற்றுக்கொண்டுள்ளார்.

எனினும் தோமஸ் தூக்க ஒழுங்கின்மை நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற மருத்துவ நிபுணர்களின் கருத்தை ஏற்றுக்கொண்டுள்ள அரசதரப்பு வழக்கறிஞர்கள் இது கொலையாகவோ அல்லது படுகொலையாகவோ இருக்க முடியாது எனவும் நீதிமன்றத்தில் கூறியுள்ளனர்.

உணவு விடுதியொன்றிலிருந்த கார் தரிப்பிடத்தில் தமது வாகனத்தில் இத் தம்பதியினர் தூங்கிக் கொண்டிருந்த சமயம் இளைஞர்கள் குழுவொன்றின் நடவடிக்கையால் இவர்களது தூக்கம் கலைந்ததைத் தொடர்ந்து இவர்கள் வேறிடத்திற்கு தமது வாகனத்தைக் கொண்டு சென்று நிறுத்தியதுடன் இருவரும் மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்தனர்.

இதன்போது அவ் இளைஞர் கூட்டம் தமது வாகனத்தை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைவதைப் போன்ற பயங்கரக் கனவொன்றை தோமஸ் கண்டுள்ளார்.

விழித்தெழுந்த போது தனது மனைவியின் உயிரற்ற உடல் அருகில் கிடப்பதைக் கண்ட தோமஸ் அதிர்ச்சியடைந்த நிலையில் அவசர சேவைப் பிரிவுக்கு அழைப்பை ஏற்படுத்தினார்.

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இவரது இவ் அழைப்பின் ஒலிப்பதிவில், தனது மனைவியைத் தான் கொன்று விட்டதாகவும் வாகனத்தை உடைத்துக் கொண்டு உள்ளே [illegible]ளோடு தான் சண்டை போட்டதாகவும் ஆனால், இறந்து கிடப்பது தனது மனைவியென்றும் குறிப்பிட்டுள்ள தோமஸ் கனவில் ஏதோவொன்றைத் தான் செய்துள்ளதாகவும் உதவிக்கு எவரையாவது அனுப்பி வைக்குமாறும் கோரியுள்ளார்.

இவ் அழைப்பு ஏற்படுத்தப்பட்ட 10 நிமிடங்களில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ் அதிகாரிகளிடம் நடுங்கியவாறு 'அவள் என் உலகம்' எனக் கதறிக் கொண்டிருந்த தோமஸைக் கண்டனர்.

இதனைத் தொடர்ந்து மனைவியின் மரணத்திற்குத் தான் காரணமென்பதை தோமஸ் ஏற்றுக்கொண்டுள்ளார். எனினும் தோமஸ் சுயநினைவில் இக் குற்றத்தைப் புரியாமையால் இதனைக் கொலையாகக் கருதி தீர்ப்பளிக்க வேண்டாமென வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திடம் கோரியுள்ளனர்.

மகிழ்ச்சியாகவும் அந்நியோன்னியமாகவும் வாழ்ந்த இத் தம்பதியினர் தமது திருமண பந்தத்தின் 40 ஆவது வருட நிறைவைக் கொண்டாட இருந்தவர்களென்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் 50 வருடங்களாக தூக்க ஒழுங்கின்மை நோயால் பாதிக்கப்பட்டிருந்த தோமஸின் நடத்தை சிந்தனையின்றி செயற்படும் ஒருவித இயந்திரத் தன்மையான இயக்கத்தைக் கொண்டிருந்ததையும் மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சம்பவநேரம் மனக் கட்டுப்பாட்டை தோமஸ் முற்றாக இழந்திருந்ததாகக் குறிப்பிட்டுள்ள வழக்கறிஞர்கள் விடுமுறை கால மகிழ்ச்சியைப் பாதிக்கும் என்பதால் மன அழுத்தத்தைக் குறைக்கும் மாத்திரைகளையும் தோமஸ் உட்கொண்டிருக்கவில்லையெனவும் கூறியுள்ளனர்.

சுய நினைவுடனான இயக்கம், சுய நினைவற்ற இயக்கம் என்ற இருவகை நடத்தைகளை தோமஸ் கொண்டிருந்ததையும் குழந்தைப் பருவத்திலிருந்தே இவர் தூக்க ஒழுங்கின்மை நோயால் பாதிக்கப்பட்டிருந்ததையும் மருத்துவ சான்றுகள் நிரூபித்துள்ளன.

இவரை முற்று முழுதாக சுயநினைவற்ற இயக்கம் ஆட்கொண்டுள்ளது என நீதிமன்றம் கருதினால் தோமஸ் உளவள மருத்துவமனையொன்றுக்கு அனுப்பப்பட்டு காலவரையறையின்றி அங்கு தடுத்து வைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படுவதற்கான தீர்ப்பு வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் சம்பவம் மீதான தீர்ப்பு தவறான முன்னுதாரணமாகிவிடக்கூடாதென்பதில் மிகக் கவனமாக இருக்கும் நீதிபதிகள் மனித நடத்தைகள் குறித்து அனைத்து சட்டப் பிரிவுகளையும் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவின் கருச்சிதைவுத் தலைநகரம்



ஐரோப்பாக் கண்டத்திலே கருச்சிதைவுத் தலைநகரம் (Abortion Capital) என்று பிரிட்டனே இப்போது வர்ணிக்கப் படுகிறது.

பிரிட்டனில் கர்ப்பந்தரிக்கும் டீன்ஏஜ் பெண்களில் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் கருச்சிதைவு செய்து விடுகிறார்களாம். முன்னர் டீன்ஏஜ் பெண்கள் கூடுதல் எண்ணிக்கையில் கருச்சிதைவு செய்துகொள்ளும் நாடாக பிரான்ஸே ஐரோப்பாவில் விளங்கியது. ஆனால் இப்போது பிரான்ஸை பிரிட்டன் முந்திவிட்டது.

ஐரோப்பா சிவில் சமூக அமைப்பொன்றினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் படி 2007 ஆம் ஆண்டில் பிரிட்டனில் 20 வயதுக்கும் குறைவான பெண்கள் மத்தியில் 48,150 கருச்சிதைவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த எண்ணிக்கை பிரான்ஸில் 31,779 ஆக இருக்கிறது. அந்த வருடம் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்தில் மொத்தம் 219,336 கருச்சிதைவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பிரான்ஸில் இந்த எண்ணிக்கை 209,699 ஆகும் என்று 'த டெய்லி மெயில்' பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

ஐரோப்பிய நாடுகளில் பிரிட்டனும் பிரான்ஸுமே கூடுதல் எண்ணிக்கையில் அடிக்கடி கருச்சிதைவுகள் செய்யப்படும் நாடுகளாக இருக்கின்றன. 2007 ஆம் ஆண்டு ரூமேனியாவில் 150,000 க்கும் அதிகமான கருக்கலைப்புகளும் இத்தாலி மற்றும் ஸ்பெயினில் முறையே 127,000 கருக்கலைப்புகளும் 112,000 கருக்கலைப்புகளும் இடம்பெற்றிருக்கின்றன.

கருக்கலைப்பு எண்ணிக்கை ஸ்பெயினில் வேகமாக அதிகரித்து வருகின்ற போதிலும் பிரிட்டனை விடவும் அதிகமானதாக இல்லை.

ஐரோப்பிய ஒன்றியத்தின் புள்ளிவிபரவியல் பிரிவான யூறோ ஸ்ரற்றினால் (Eurostat) திரட்டப்பட்ட இந்த விபரங்களை குடும்ப கொள்கைகள் நிறுவனம் (Institute for Family Policies) ஆராய்ந்து பார்த்திருக்கிறது. நோர்வேயை மையமாகக் கொண்ட இந்த நிறுவனம் குடும்ப வாழ்வுக்கே நிலைவரம் தொடர்பான அபிவிருத்தி அறிக்கையொன்றை ஐரோப்பிய பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்திருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் வருடாந்தம் செய்யப்படுகின்ற கருச்சிதைவுகளின் எண்ணிக்கை ஒன்றியத்தின் 10 சிறிய உறுப்பு நாடுகளின் மொத்த சனத்தொகைக்குச் சமமானதாகும்.

கர்ப்பந்தரிக்கும் டீன்ஏஜ் பெண்கள் கூடுதலாக கருச்சிதைவை நாடும் போக்கு அதிகரித்திருக்கிறது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். தனியான தாயாக (Single Mother hood) வாழ்வை விடவும் தங்களது கல்வியை அல்லது தொழில்களைத் தொடருவதை டீன்ஏஜ் பெண்கள் விரும்புவதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

டீன்ஏஜ் கர்ப்பந்தரிப்பு விவகாரத்தைக் கையாளுவதில் அரசாங்கத்தின் கொள்கையில் அல்லது தந்திரோபாயத்தில் இருக்கின்ற தவறின் விளைவே துரதிர்ஷ்டவசமான இந்த சூழ்நிலை தோன்றியிருப்பதாக கருச்சிதைவுக்கு எதிரான இயக்கங்கள் குற்றஞ் சாட்டியிருக்கின்றன.

கொள்கைகளில் இருக்கின்ற முட்டாள் தனத்தை அமைச்சர்கள் புரிந்துகொள்ளும் வரை பிரிட்டனில் கருச்சிதைவுகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகும் என்று 'Right to Life' என்ற அமைப்பைச் சேர்ந்த பிலிஸ் பௌமான் என்பவர் தெரிவித்தார்.

டீன்ஏஜ் கர்ப்பந்தரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்திட்டத்துக்கு (Teenage Pregnancy Strategy) பிரிட்டன் 30 கோடி ஸ்ரேலிங் பவுண்களை செலவழித்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நொதேர்ண் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி 338ஆம் இலக்கத்தில் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.